## அல்லாஹ்வின் கட்டளை

فَمِنَ النَّاسِ مَنۡ يَّقُوۡلُ رَبَّنَآ اٰتِنَا فِى الدُّنۡيَا وَمَا لَهٗ فِى الۡاٰخِرَةِ مِنۡ خَلَاقٍ

பொருள்

**எங்கள் இறைவா! எங்களுக்கு இவ்வுலகில் (சுகங்களை) வழங்குவாயாக என்று மக்களுள் சிலர் கூறுகின்றனர். இவர்களுக்கு மறுமையில் எவ்விதப் பங்கும் இல்லை.**

**(அல்பக்கரா:201)**

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ    نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ    وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡد

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ


தொகுதி 10

இதழ் 34

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

ஹிஜ்ரீ கமரீ 1447 - ஸஃபர் 26 ★ ஹிஜ்ரீ ஷம்ஸி 1404 - ஸூஹுர் 21 ★ ஆகஸ்ட் 21 2025


## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## எந்த நபர் நன்மை பயப்பவராகவும் மார்க்கத்தின் சேவகராகவும் இருக்கின்றாரோ அல்லாஹ் தாமாகவே அவரது ஆயுளிலும் ஆரோக்கியத்திலும் அருள் பாலித்து விடுகின்றான்

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து……

### (நீண்ட) ஆயுளுக்கான ஆசை பாவத்தின் வேராகும்

(நீண்ட) வாழ்க்கைக்கான அதிக ஆசை பெரும்பாலான பாவங்கள் மற்றும் பலவீனங்களுக்கான வேர் ஆகும். எமது நண்பர்களுக்கு கடமை என்னவென்றால், அவர்கள் (தமது) உண்மையான எஜமானனின் திருப்தியில் நேசத்திற்குரிய நேரங்களை கழிப்பதற்கு எப்போதும் முயற்சி செய்ய வேண்டும். அசல் விஷயம் இதுவே ஆகும். அவ்வாறில்லையென்றால் இன்று மரணிப்பவருக்கும், உதாரணமாக ஐம்பதாண்டுகளுக்குப் பிறகு மரணிப்பவருக்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது? இன்று சூரியனும் சந்திரனும் இருக்கின்றது. இவைதான் அந்த நாளிலும் இருக்கும்.

எந்த நபர் நன்மை பயப்பவராகவும் அவனது மார்க்கத்திற்கு சேவகராகவும் இருக்கின்றாரோ அல்லாஹ் தாமாகவே அவரது ஆயுளிலும் ஆரோக்கியத்திலும் அருள் பாலித்து விடுகின்றான். மக்களுக்கு தீங்கிழைப்பவரை அவன் சற்றும் பொருட்படுத்த மாட்டான்.

எனவே நீங்கள் எல்லா பணிகளையும் எல்லா நிலையிலும் இறைவனிடம் நின்று கொண்டு மேற்கொள்ளுங்கள். இறைவன் சுயமே உங்களை பாதுகாப்பான்.

முப்பது ஆண்டுகளுக்கும் அதிகமான காலம் கழிந்து விட்டது. "உமது வயது என்பது ஆண்டு அல்லது இரண்டு, நான்கு (ஆண்டு) மேலே கீழே இருக்கும்" என்று எனக்கு அல்லாஹ் தெளிவான சொற்களில் கூறினான். எந்த பணி என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதோ அது எல்லாவற்றையும் இந்த காலக்கட்டத்திற்குள் செய்வது ஒப்புதலுக்குரியதாக இருக்கும் என்பதே இதில் உள்ள இரகசியமாகும்.

எனவே எனது நோயின்போது ஒருபோதும் மரணத்தைக் குறித்த துன்பம் எனக்கு ஏற்பட்டதில்லை. எனக்கு நன்றாக நினைவு இருக்கின்றது. அதாவது எந்த மரங்களுக்கு கீழ் ஆறு, ஏழு வயதில் நான் விளையாடிக் கொண்டிருந்தேனோ இன்று அதே சில மரங்கள் அதேபோன்று பசுமை நிறைந்ததாக நிலை நிற்கின்றது. ஆனால், நான் எனது நிலையை முற்றிலும் வேறொன்றாகவே காண்கிறேன். உங்களால் இதனை எண்ணிப் பார்க்க முடியும். இந்த சாபங்களையும், ஏச்சுப் பேச்சுகளையும் சமகாலத்தைச் சார்ந்தவர்களிடமிருந்து கிடைக்கும் வெகுமதியாக கருதுங்கள். இதிலேயே ஆன்மாவின் சீர்திருத்தம் நோக்கமாக இருக்கின்றது.

(மல்ஃபூஸாத்,தொகுதி 2, பக்கம் 82, காதியான் பதிப்பு)

## தொழுகையைப் பேணுவது ஒவ்வொருவரின் கடமையாகும். ஒருவர் தொழுகைக்கான நேரத்தில் அதனை நிறைவேற்றுவது ஒவ்வொரு நபரின் மீதும் கடமையாகும்.ஒவ்வொரு நபரும் ஜமாஅத்தாக தொழுவது அவர் மீது கடமையாகும்

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் சூரா அல் முஃமினூன் வசனம் 10-ன் விளக்கவுரையில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

ஈமானின் ஆறாம் படித்தரம் இதுவாகும். அதாவது நஃபில் தொழப்பட வேண்டும். இவ்வாறு நஃபில்கள் தொழக் கூடியவர் இறைவனிடத்தில் இந்த விஷயத்தை வெளிப்படுத்துகின்றார்; அதாவது,நான் கடமையாக்கப்பட்டவற்றை நிறைவேற்றி விட்டேன்; ஆனால், அந்த கடமையாக்கப்பட்டவற்றால் எனது உள்ளத்திற்கு நிம்மதி ஏற்படவில்லை. மேலும் அவர் கூறுகின்றார்:

இறைவா! நான் இதனை விரும்புகின்றேன்; அதாவது நான் கடமையாக்கப்பட்ட நேரங்கள் மட்டுமின்றி உனது சமூகத்தில் கூடுதல் நேரம் ஆஜராக விரும்புகின்றேன். உதாரணமாக, பல மக்கள் சான்றோரை சந்திப்பதற்காக மக்கள் செல்கின்றபோது, அவர் நிர்ணயிக்கப்பட்ட நேரம் கழிந்த பிறகு, மேலும் இரண்டு நிமிடங்கள் கொடுங்கள் என்று கேட்கின்றனர். மேலும், அவர்கள் கூடுதலாக கிடைத்த அந்த இரண்டு நிமிடங்களிலும் இன்பமடைகின்றனர். இதே போன்று ஒரு நம்பிக்கையாளர் கடமையாக்கப்பட்டவற்றை நிறைவேற்றிய பிறகு நஃபில்கள் தொழுகின்றனர். அந்நிலையில்,"நான் தற்போது என் புறமிருந்து சற்று கூடுதல் நேரம் உன் சன்னிதானத்தில் இருக்க விரும்புகிறேன் என்று அவர் இறைவனிடம் கூறுகின்றார்.

ஈமானின் ஏழாவது படித்தரம் இதுவாகும். அதாவது மனிதன் ஐவேளை தொழுகைகளையும், நஃபில்களையும் மட்டும் தொழக் கூடாது. மாறாக இரவிலும் தஹஜ்ஜுத் எனும் தொழுகையை தொழ வேண்டும். இந்த ஏழு படித்தரங்களின் மூலமாக தொழுகை முழுமையடைகின்றது. எனவே இந்த ஏழு படித்தரங்களை முழுமை செய்வது ஒவ்வொரு நபருக்கும் அவசியமாகும்.தொழுகையைப் பேணுவது ஒவ்வொருவரின் கடமையாகும்.

(தஃப்ஸீரே கபீர்,தொகுதி 6, பக்கம் 136-137, காதியான் பதிப்பு, 2010-ம் ஆண்டு)

## நபிமொழி

ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அபீ பக்ர் (ரலி) அவர்கள் தமது தந்தையிடமிருந்து அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் ஒரு நபர் மற்றொரு நபரை புகழ்ந்தார். அப்போது, உம் மீது நாசம் உண்டாகட்டும்! நீரோ உமது தோழரின் கழுத்தை வெட்டி விட்டுவீர்! நீரோ உமது தோழரின் கழுத்தை வெட்டி விட்டுவீர்! என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த விஷயத்தை பலமுறை கூறினார்கள்.

பின்னர் அன்னார் (ஸல்) கூறினார்கள்: உங்களில் எவருக்கு தனது சகோதரரை கண்டிப்பாக புகழ வேண்டுமோ அவர் இவ்வாறு கூற வேண்டும்; நான் இவரைக் குறித்து இவ்வாறு கருதுகிறேன்; அல்லாஹ்வே அதனை நன்கு அறிவான். அல்லாஹ்வின் முன்னிலையில் எவரையும் குறையற்றவர் என்று என்னால் கூறமுடியாது. அவர் இப்படிப்பட்டவர் என்று நான் கருதுகிறேன். இவ்வாறு அவர் எடுத்துரைக்கலாம். ஆனால் நிபந்தனை என்னவென்றால், அவர் அப்படிப்பட்டவர் என்று அவரைக் குறித்து அறிந்திருக்க வேண்டும்.

விளக்கம்: ஹஸ்ரத் ஸைனுல் ஆபிதீன் ஸாஹிப் வலியுல்லாஹ் ஷாஹ் (ரஹி) அவர்கள் இந்த ஹதீஸுக்கு இவ்வாறு விளக்கம் அளிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒருவரின் முன்னிலையில் அவரை புகழ்வதை விரும்பவில்லை. அப்படிப்பட்ட புகழ்ச்சி பொருத்தமற்றது மட்டும் அல்ல. மாறாக அது புகழப்பட்டவரை சுயநலத்தில் மூழ்கி விடச் செய்து விடும். தேவைப்படும்பட்சத்தில புகழ்ச்சியில் எச்சரிக்கையை மேற்கொள்ள வேண்டும். (புஹாரீ)


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**மக்கா வெற்றிப் போரின் பின்னணியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூய வாழ்க்கை**

முஹம்மது (ஸல்) அவர்கள் தம்மை மிகவும் நன்றியுவுணர்வுடன் பல சந்தர்ப்பங்களில் ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு கொண்டு சேர்த்த அதே ஒட்டகத்தில் அமர்ந்து கொண்டு நகருக்குள் நுழைகிறார்கள். நன்றி உணர்வால் அவர்களின் உள்ளம் நிறைந்து காணப்பட்டது. ஏனெனில் பாதைகள் காலியாக இருப்பதை அன்னார் (ஸல்) கண்ட போது, அமைதியான முறையில் தாம் வரவேற்கப்படுவதை அவர்கள் புரிந்து கொண்டார்கள். கடந்த காலங்களில் மக்காவாசிகள் செய்த அநீதிகள் நினைவுக்கு வந்து அது அன்னாரை பழிவாங்க தூண்டி இருக்கலாம். ஆனால், தம் படையிடம் எந்த ஒரு ரத்தம் சிந்துதலும் இருக்கக் கூடாது என்று தடை செய்திருந்தார்கள். அன்னாருடைய இந்த விஷயம் மிகவும் புகழத்தக்க ஒரு விஷயம் ஆகும். பணிவையும் இறைவனுக்கு நன்றி செலுத்துவதையும் எல்லா சாத்தியமான வழிமுறைகளின் மூலமாகவும் அவர்கள் வெளிப்படுத்தினார்கள்

(Arthur Gilman என்ற மேற்கத்திய எழுத்தாளர்)

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களோ அந்நாளில் அல்லாஹ்வின் ஃகஃப்பார் (மன்னிப்பவன்), ஸத்தார் (குறைகளை திரையிடுபவன்) ரஹீம் (மீண்டும், மீண்டும் கருணை காட்டுபவன்) மற்றும் கரீம் (இரக்கம் காட்டுபவன்) ஆகிய பண்புகளின் முழுமையான வெளிப்பாடாக தென்பட்டார்கள். மன்னிப்புக் கேட்டு பிறகு அன்னாரால் மன்னிக்கப்படாத எந்த ஒரு நபரும் அங்கு தென்படவில்லை. அவர் மரண தண்டனை விதிக்கப்பட்டவராக இருந்தாலும் சரியே!

அடுத்த வெள்ளிக்கிழமை இன்ஷா அல்லாஹ்! ஜமாஅத் அஹ்மதிய்யா பிரிட்டனுடைய ஆண்டு மாநாடும் தொடங்குகிறது.அதற்காகவும் துஆ செய்யுங்கள்

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 18 ஜுலை 2025** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1404 ஆண்டு **வஃபா** மாதம் **18 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

இன்றும் மக்கா வெற்றியின் சம்பவங்களைக் குறித்து மேற்கொண்டு விபரத்தை எடுத்துக் கூறுவேன். பெருமானார் (ஸல்) அவர்கள் மக்காவில் தங்கிய கால அளவை குறித்த விபரத்தில் இவ்வாறு எடுத்துக் கூறப்பட்டுள்ளது: பெருமானார் (ஸல்) அவர்கள் மக்காவுக்கு வருகை தந்து மக்காவை வெற்றி கொண்ட பிறகு மக்காவில் சில நாட்கள் தங்கி இருந்தார்கள். அந்த கால அளவு தொடர்பாக கருத்து வேறுபாடு காணப்படுகிறது. புஹாரீயில் ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களின் அறிவிப்பில் வருகிறது: பெருமானார் (ஸல்) அவர்கள் மக்காவில் 19 நாட்கள் தங்கி இருந்தார்கள். அன்னார் இரண்டு ரக்அத் தொழுவார்கள். அதாவது தொழுகையை கஸ்ர் செய்து தொழுவார்கள்.

சில அறிவிப்புகளில் 18 (நாட்கள்) என்றும், 17 (நாட்கள்) என்றும், 15 (நாட்கள்) என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன. அல்லாமா இப்னு ஹஜர் அவர்கள் 19 நாட்கள் என்று வரும் அறிவிப்புக்கு முன்னுரிமை வழங்கியுள்ளார்கள். ஏனெனில், பெரும்பாலான அறிவிப்புகளில் 19 நாட்கள் என்றுதான் கூறப்பட்டுள்ளன. மற்ற அறிவிப்புகள் எவ்வாறு ஒன்று திரட்டப்பட்டுள்ளன என்றால், 19 நாட்கள் என்று கூறப்பட்டுள்ள அறிவிப்புகளில் மக்காவில் நுழைந்த நாளும் மக்காவை விட்டு புறப்பட்ட நாளும் சேர்க்கப்பட்டுள்ளன. எவர்கள் எல்லாம் 17 நாட்கள் என்று எடுத்துக் கூறியுள்ளார்களோ அவர்கள் வருகை தந்த நாளையும், புறப்பட்ட நாளையும் சேர்க்கவில்லை. எந்த அறிவிப்பாளர்களெல்லாம் 18 நாட்கள் என்று அறிவித்துள்ளார்களோ அவற்றில் அந்த இரு நாட்களில் ஏதோ ஒரு நாளை மட்டுமே சேர்த்துள்ளார்கள். ஆனால், 15 நாட்கள் என்று அறிவிக்கக் கூடிய அறிவிப்பாளர்கள் 17 நாட்கள் என்று அறிவிக்கப்படும் அறிவிப்புகளை கருத்தில் கொண்டு இது அசல் ஆகும் என்று எழுதியுள்ளனர். மேலும், அவற்றில் நுழைகின்ற நாளையும், புறப்படும் நாளையும் சேர்க்காமல் 15 நாட்கள் என்று குறிப்பிட்டுள்ளனர்.

(ஸுபுலுல் ஹுதா, தொகுதி 5, பக்கம் 261, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

சில மேற்கத்திய வரலாற்று ஆசிரியர்களும் கூட பெருமானார்(ஸல்) அவர்களின் மக்கா வெற்றியை தம் நூல்களில் எழுதியுள்ளார்கள்: வில்லியம் முயர் என்பவர் ஒரு மிகப் பெரிய பிரபல்யமான மேற்கத்திய வரலாற்று ஆசிரியர் ஆவார். அவர் ஸ்காட்லாண்டைச் சேர்ந்தவர் ஆவார். THE LIFE OF MUHAMMAD என்ற நூலில் மக்கா வெற்றியை பற்றி எடுத்துரைத்தவாறு அதில் பெருமானார் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியை எடுத்துரைத்தவாறு இவ்வாறு எழுதுகிறார்:

முஹம்மது (ஸல்) அவர்கள், கடந்த கால அனைத்து தவறுகளையும் மன்னிப்பது என்பது அதாவது மக்களின் அனைத்து தவறுகளையும் மன்னிப்பது, (அவர்கள் கொடுத்த) சிறிய, பெரிய துன்பங்களை மன்னிப்பது என்பது உண்மையிலேயே அன்னாரின் சுய இலாபத்திற்காகவே இருந்தது.

இதை எழுதிய பிறகு அவர் உண்மையை ஒப்புக் கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கும் ஆளாகி இருக்கின்றார். அவர் கூறுகின்றார்: ஆனால், இதற்கு ஒரு மிகப் பெரிய மற்றும் மென்மையான உள்ளமும் வேண்டும். அவ்வாறு நடந்து கொண்டதன் பயன் அன்னாருக்குத்தான் கிடைக்கவிருந்தது.அதாவது அன்னாரின் சொந்த ஊரின் குடிமக்கள் அனைவரும் அன்னாருடன் சேர்ந்து கொண்டார்கள். அன்னாருடைய (வருகையின்) நோக்கத்தை முழுமையான மனமகிழ்ச்சியுடனும், தெளிவான கொள்கை பிடிப்புடனும் தமதாக்கிக் கொண்டார்கள். அதற்கு சில வாரங்களுக்குப் பிறகு நாம் காண்பது என்னவென்றால், அவர்களிலிருந்து 2000 பேர் அன்னாருக்கு இரு புறங்களிலும் நின்றவாறு மிகவும் நன்றி உணர்வுடன் அன்னாருக்காக போர் செய்வதற்கு ஆயத்தமாகி விட்டார்கள்.

இவ்வாறே Williammontgomery என்பவர் எழுதுகிறார்: இவரும் Scottish ஐ சார்ந்த ஒரு மேற்கத்திய வரலாற்று ஆசிரியர் ஆவார். இவர் இஸ்லாத்திற்கெதிராகவும், கண்ணியத்திற்குரிய நபி (ஸல்) அவர்களுக்கு எதிராகவும் தம் நூலில் மிக கடுமையான விஷயங்களை பேசி இருக்கிறார். ஆனால் MUHAMMAD at MADINA என்ற தம் நூலில் இவ்வாறு எழுதி இருக்கிறார்: அதனுடைய மொழியாக்கத்தை நான் எடுத்து வைக்கிறேன். இதற்கு முன்பும் கூட நான் மொழியாக்கத்தைதான் எடுத்து வைத்தேன்.

மக்கத்து தலைவர்கள் முஸ்லிம்களாக ஆக வேண்டும் என்று கட்டாயப்படுத்தவில்லை.

இதை அவரே ஒப்புக் கொள்கிறார்.

இந்த தலைவர்களும், இன்னும் எவ்வளவோ மக்களும் நிராகரிப்பில்தான் நிலைத்திருந்தார்கள். இந்த அனைத்தையும் விட மிக பெரிய விஷயம் என்னவென்றால், அது முஹம்மது (ஸல்) அவர்கள் தம் தலைமையில் அந்த ஒற்றுமையை தாங்கிப் பிடித்தார்கள். உங்களுடன் நீதியோடுதான் நடந்து கொள்ளப்படுகிறது என்று ஏறக்குறைய அனைத்து மக்களையும் உணரச் செய்தார்கள். இந்த விஷயம் இஸ்லாமிய சமூகத்தில் சமத்துவம், நிம்மதி மற்றும் உத்வேகம் ஆகிய உணர்வுகளை இன்னும் அதிகமாக்கியது. அது பிற இடங்களில் காணப்பட்ட நிம்மதியற்ற நிலைக்கு நேரெதிராக இருந்தது. இந்த விஷயம் நிச்சயமாக பல மக்களுக்கு தெளிவாக தெரிந்திருக்கும். அது அனைத்திலும் ஒரு விஷயம் கண்டிப்பாக

தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருந்தது. அது என்னவெனில், முஹம்மது (ஸல்) அவர்கள் தம் குறிக்கோள், தம் அகப்பார்வை, தம் தொலைநோக்குப் பார்வை ஆகியவற்றின் மீது அவர்களுக்கு இருந்த நம்பிக்கை ஆகும். அன்னாருடைய ஜமாஅத் சிறியதாக இருந்தபோது, எதிரிகளிடமிருந்து தப்பிப்பதற்காகவே அவர்களின் அனைத்து வழிமுறைகளும் செலவாகிக் கொண்டிருந்தபோது, ஒற்றுமையின் ஓர் அரேபியாவை பற்றிய கண்ணோட்டத்தை அன்னார் (ஸல்) உருவாக்கினார்கள். அது எல்லா திசைகளிலும் பரவும். அதில் மக்காவைச் சேர்ந்த மக்கள் தம் பழைய வியாபார பங்களிப்பை காட்டிலும் மிக முக்கிய, புதிய பங்களிப்பை செலுத்துவார்கள் என்ற கண்ணோட்டம் இப்போதோ ஏறக்குறைய அனைத்து மக்களும், எந்த அளவுக்கு என்றால், மிகப் பெரியவர்கள் கூட இதற்கு முன்னால் அடிபணிந்து விட்டார்கள். குறிப்பான கஷ்ட நிலையைத் தவிர நெருக்கடியான நிலைமைகளில் அவர்கள் எப்பொழுதும் முழுமையான நம்பிக்கையுடன் இலக்கை நோக்கி முன்னேறிச் சென்று கொண்டிருந்தார்கள். நமக்கு இந்த வரலாற்று சம்பவங்களின் உண்மை மீது நம்பிக்கை இல்லாதிருப்பின், அற்பமாக கருதப்பட்ட மக்காவின் நபி தம் ஊரில் வெற்றி பெற்றவராக திரும்ப வர முடியும் என்று யாராவது நம்பியிருப்பாரா? என்றால் அது சந்தேகம்தான்.

பிறகு, ஆர்தர் கில்மேன் (Arthur Gilman) என்ற மேற்கத்திய எழுத்தாளர் ஒருவர் இவரும் மிகப் பிரபல்யமான மேற்கத்திய வரலாற்று ஆசிரியராவார். இவர் அமெரிக்காவைச் சார்ந்தவர் ஆவார். இவர் மக்கா வெற்றியை பற்றி குறிப்பிட்டவாறு The Saracenes என்ற தன் நூலில் கண்ணியத்திற்குரிய நபி (ஸல்) அவர்களின் பொது மன்னிப்பு, அழகிய முன்மாதிரி,சகிப்புத்தன்மை ஆகியவற்றை ஒரு முன்னுதாரணமான பாத்திரமாக எடுத்துரைத்தவாறு இவ்வாறு எழுதுகிறார்:

முஹம்மது (ஸல்) அவர்கள் தம்மை மிகவும் நன்றியுவுணர்வுடன் பல சந்தர்ப்பங்களில் ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு கொண்டு சேர்த்த அதே ஒட்டகத்தில் அமர்ந்து கொண்டு நகருக்குள் நுழைகிறார்கள். நன்றி உணர்வால் அவர்களின் உள்ளம் நிறைந்து காணப்பட்டது. ஏனெனில் பாதைகள் காலியாக இருப்பதை அன்னார் (ஸல்) கண்ட போது, அமைதியான முறையில் தாம் வரவேற்கப்படுவதை அவர்கள் புரிந்து கொண்டார்கள். கடந்த காலங்களில் மக்காவாசிகள் செய்த அநீதிகள் நினைவுக்கு வந்து அது அன்னாரை பழிவாங்க தூண்டி இருக்கலாம். ஆனால், தம் படையிடம் எந்த ஒரு ரத்தம் சிந்துதலும் இருக்கக் கூடாது என்று தடை செய்திருந்தார்கள். அன்னாருடைய இந்த விஷயம் மிகவும் புகழத்தக்க ஒரு விஷயம் ஆகும். பணிவையும் இறைவனுக்கு நன்றி செலுத்துவதையும் எல்லா சாத்தியமான வழிமுறைகளின் மூலமாகவும் அவர்கள் வெளிப்படுத்தினார்கள்.

இதற்குப் பிறகு அந்த எழுத்தாளர் காலித் பின் வலீத் அவர்களின் சம்பவத்தை எடுத்து கூறி இருக்கிறார். அது ஏற்கனவே கூறப்பட்டு விட்டது. அவர் கூறுகிறார்:

ஓரிடத்தில் காலித் அவர்கள் அதிகாரத்தை, அதிகாரத்தைக் கொண்டு எதிர்த்தார்கள் என்பது உண்மைதான். ஆனால், அதை முஹம்மது (ஸல்) அவர்கள் கடுமையாக வெறுத்தார்கள். நபி (ஸல்) அவர்கள் செய்த முதல் வேலை, சிலைகளை விட்டு கஅபாவை தூய்மையாக்கியதுதான். அதற்குப் பிறகு அவர்கள் பாங்கு சொல்லக் கூடியவரை அழைத்து கஅபாவின் மேலே நின்று தொழுகைக்காக அழைக்குமாறு கட்டளையிட்டார்கள். பிறகு, அறிவிக்கக் கூடிய ஒருவரை அனுப்பி ஒவ்வொருவரும் தம்மிடத்தில் இருக்கும் சிலைகளை உடைத்து விடுமாறு அறிவிக்க செய்தார்கள்.

பிறகு எழுதுகிறார்: பல்வேறு சந்தர்ப்பங்களில் மிகவும் மிருகதத்தனமான முறையில் நடந்து கொண்ட 10 அல்லது 12 பேருக்கு தண்டனை கொடுக்க வேண்டும் என்று கட்டளையிடப்பட்டிருந்தது. அதில் நான்கு பேருக்கு மரண தண்டனை கொடுக்கப்பட்டது. ஆனால் இந்த நடைமுறையை ஒப்பிட்டு பார்க்கும்போது இது மிகவும் அதிக மனிதத் தன்மையுடன் நிறைந்து இருப்பதாக கருதுகிறேன்.

(கிறிஸ்தவ) சிலுவைப் போராளிகளின் அநீதிகளை பற்றி குறிப்பிட்டவாறு மேற்கொண்டு எழுதுகிறார்:

1099 ஆம் ஆண்டில் ஜெருசேலம் கைப்பற்றப்பட்டபோது 70 ஆயிரம் முஸ்லிம் ஆண்களும், பெண்களும் , ஆதரவற்ற குழந்தைகளும் அப்போது மரணத்தின் குழியில் தள்ளப்பட்டார்கள். அதேபோன்று 1874 இல் ஆஃப்ரிக்காவில் கோல் கோஸ்டில்-தற்போது அதனுடைய பெயர் கானா ஆகும். ஒரு தலைநகரம் எரிக்கப்பட்டது. இவற்றோடு ஒப்பிட்டு பார்க்கும்போது முஹம்மது (ஸல்) அவர்களின் வெற்றி உண்மையிலேயே மார்க்கத்தின் வெற்றியாக இருந்தது. அது அரசியல் வெற்றியாக இருக்கவில்லை. எல்லா விதத்திலும் தம் தனிப்பட்ட கண்ணியம் குறித்த விஷயங்களை அவர்கள் மறுத்தார்கள். அரசாங்க பாவனைகளின் அனைத்து வழிமுறைகளையும் விட்டு தவிர்ந்து கொண்டார்கள். மக்காவின் ஆணவம் கொண்ட அனைத்து தலைவர்களும் அன்னாருக்கு முன்னால் கொண்டு வரப்பட்டபோது நீங்கள் என்னிடமிருந்து இன்று எதை எதிர்பார்க்கின்றீர்கள்? என்று கேட்டார்கள். அதற்கு, தாராள மனப்பான்மை கொண்ட எங்களது சகோதரரே! கருணையை எதிர்பார்க்கிறோம் என்று அவர்கள் கூறினார்கள். அதற்கு, அப்படி என்றால் அவ்வாறே நிகழட்டும்; நீங்கள் அனைவரும் சுதந்திரமானவர்கள் ஆவீர்கள் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

பிறகு ரூத் கிரண்ஸ்டன்(Ruth Cranston) என்ற மேற்கத்திய வரலாற்று ஆசிரியர் ஒருவர் இருக்கிறார். இவரும் அமெரிக்காவைச் சார்ந்தவர் ஆவார். மக்கா வெற்றியைக் குறிப்பிட்டவாறு World Faith எனும் தன் நூலில் எழுதியிருக்கிறார். இவர் பெண்மணி ஆவார். இவ்வாறு எழுதுகிறார்:

630 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ஒருநாள் என்ன நிகழ்ந்தது? என்றால், பத்து ஆண்டுகளுக்கு முன்பு கற்களால் அடித்து இந்த நகரத்திலிருந்து வெளியேற்றப்பட்டு, கேலிக்கு ஆளாக்கப்பட்ட அந்த மனிதர் இப்போது தனது பத்தாயிரம் அனுபவமிக்க வீரர்களுடன் மக்கா நகரத்திற்குள் நுழைகிறார். யாரையும் கொல்ல வேண்டாம் என்றும், நகரவாசிகளிடம் இரக்கத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என்றும், முஹம்மது (ஸல்) கட்டளையிட்டிருந்தார். ஆனால், மக்காவாசிகள் கொடுத்த அனைத்து வாக்குறுதிகள் மற்றும் உறுதிமொழிகள் இருந்தபோதிலும் அவர்களின் வீரர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. அப்போது, நபி (ஸல்) அவர்களின் படைகளின் தளபதியாக காலித் இருந்தார். அப்போது அவர் முஸ்லிமாக ஆகியிருந்தார். அவர் கடுமையான முறையில் பதிலடி கொடுத்துக் கொண்டிருந்தார். நபி (ஸல்) அவர்களுக்கு காலித் அவர்களை அந்த நடவடிக்கையிலிருந்து தடுப்பது கடினமான விஷயமாக இருந்தது.

எவ்வாறிருந்தாலும், இந்த எழுத்தாளர் இவ்விஷயத்தில் மிகைப்படுத்தி இருக்கிறார். (மக்கா வாசிகள் சார்பாக) எந்த உறுதிமொழியும் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. மக்காவாசிகள்தான் முதலில் தாக்கியிருந்தார்கள். எப்படியிருந்தால், அவர்களிடத்தில் உள்ள மார்க்க துவேஷம் எங்காவது வெளிப்பட்டு விடுகிறது. பிறகு அவர் எழுதுகிறார்:

2 முஸ்லிம்களும், 28 மக்காவாசிகளும் கொல்லப்பட்டார்கள். இப்படிப்பட்ட ஒரு நேரத்தில், ஒரு சந்தர்ப்பத்தில் வேறு எந்த தலைவரும் தலைமையேற்றிருந்தால் எவ்வளவு கொலையும், அழிவும் ஏற்பட்டிருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள்!

பிறகு இங்கே மீண்டும் உண்மையை கூற வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகி இருந்தார். எழுதுகிறார்: முஸ்லிம் படை நகரைக் கைப்பற்றியதும், முஹம்மது (ஸல்) அவர்கள் தமது உடையை மாற்றி, வெள்ளை இஹ்ராம் அணிந்தார்கள். அன்னார் (ஸல்) ஹஜ்ஜுக்காக நிர்ணயிக்கப்பட்ட செயல்முறைகளை நிறைவேற்றினார்கள். கஅபாவை ஏழு முறை தவாஃப் செய்தார்கள். பிறகு, அன்னார் (ஸல்) தமது மற்ற தோழர்களை அழைத்தார்கள். அவர்கள் எப்படிப்பட்ட தோழர்கள் என்றால், அன்னாருடைய நோக்கத்திற்காக மீண்டும், மீண்டும் தம் உயிரை பணயம் வைத்து தியாகம் செய்தவர்கள். அவர்கள் மகத்தான நாளிலும் அன்னாருடைய வாழ்க்கையின் மிக முக்கியமான இந்த சந்தர்ப்பத்திலும் தம்முடன் துணையாக நிற்க வேண்டும் என்று விரும்பினார்கள். ஹுபல் சிலை உட்பட ஒவ்வொரு சிலையாக 360 சிலைகள் கஅபாவிலிருந்து அகற்றப்பட்டு உடைக்கப்பட்டன. ஒவ்வொரு சிலையையும் உடைக்கும்போதும் முஹம்மது (ஸல்) அவர்கள் உரத்த குரலில், “உண்மை வந்து விட்டது ; பொய் அழிந்து விட்டது” என்று கூறினார்கள்.

பிறகு, கேரன் ஆர்ம்ஸ்ட்ராங் என்பவர் இருக்கிறார்; இவரும் ஒரு நல்ல மேற்கத்திய வரலாற்று ஆசிரியை ஆவார். பொதுவாக மிகவும் நீதியுடன் எழுதுபவர். இவர் 1944-இல் பிறந்தார். இங்கிலாந்தின் ஒரு புகழ்பெற்ற அறிஞரும் எழுத்தாளரும் ஆவார். மதங்களுக்கு இடையிலான ஒப்பீட்டு ஆய்வுகள் குறித்த தனது எழுத்துக்களுக்காக இவர் புகழ் பெற்றுள்ளார். இவர் தம் நூலான முஹம்மது MUHAMMAD: A Biography of the Prophet இல் மக்கா வெற்றியைக் குறித்து இவ்வாறு எழுதியுள்ளார்:

நபி (ஸல்) அவர்களுக்கு ரத்தம் சிந்த வைப்பதன் மூலமாக பழிவாங்கும் எண்ணம் எதுவும் இருக்கவில்லை. இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும்படி யாரும் கட்டாயப்படுத்தவில்லை. எவர் மீதும் எந்த அழுத்தமும் கொடுக்கப்பட்டதாகவும் தெரியவில்லை. முஹம்மது (ஸல்) அவர்கள் மக்களைக் கட்டாயப்படுத்த விரும்பவில்லை. மாறாக, அவர்களிடையே அமைதி மற்றும்

நல்லிணக்கத்தை ஏற்படுத்த விரும்பினார்கள். நபி (ஸல்) அவர்கள் குறைஷியர்களைத் துன்புறுத்த வேண்டும் என்பதற்காக மக்காவிற்கு வரவில்லை. மாறாக, அம்மக்களுக்கு உதவாததாக நிரூபணமான அந்த மதத்தை முடிவுக்கு கொண்டு வர வந்தார்கள். மக்கா வெற்றியின் மூலம் முஹம்மது (ஸல்) அவர்கள் நபித்துவத்துடைய தம் வாதத்தின் உண்மையை நிரூபித்தார்கள். இந்த வெற்றி எந்தவித இரத்தம் சிந்ததுதலும் இல்லாமல் கிடைத்தது. முஹம்மது (ஸல்) அவர்களின் அமைதி கொள்கை வெற்றி பெற்றது. சில ஆண்டுகளிலேயே ஸுஹைல் போன்ற மிகக் கடுமையான எதிரிகள் கூட கலப்பற்ற மற்றும் உத்வேகம் நிறைந்த முஸ்லிம்களாக மாறிப்போனார்கள்.

எவ்வாறிருப்பினும், இந்த மேற்கத்திய வரலாற்றிசிரியர்களுள் சிலர் எப்படிப்பட்டவர்களாக உள்ளார்கள் என்றால், கடுமையான எதிர்ப்பாளராக இருந்தபோதிலும் இந்த உண்மையை எடுத்துரைத்துள்ளார்கள். உண்மையை ஒப்புக் கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு ஆளானார்கள். அவர்களால் வேறு எதுவும் செய்ய முடியவில்லை. மக்கா வெற்றி தொடர்பாக இன்னும் சில சம்பவங்களும் உள்ளன.

அப்துல்லாஹ் பின் ஸஃது பின் அபீ ஸர்ஹ் பாவமன்னிப்பு கோரிய சம்பவம் ஆகும். இதைக் குறித்து எழுதப்பட்டுள்ளதாவது; அவர் முன்பு இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்தார் என்றும், வஹீ எழுத்தாளராகவும் இருந்தார். பிறகு அவர் இஸ்லாத்திலிருந்து விலகி மீண்டும் திரும்பிச் சென்று விட்டார். அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது என்றும் கூறப்படுகிறது. மக்கா வெற்றி கொள்ளப்பட்டபோது, இவர் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்குப் பால்குடிச் சகோதரர் ஆவார். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் இவரை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முன் கொண்டு வந்து, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அப்துல்லாஹ்வின் பைஅத்தை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று வேண்டினார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் நீண்ட நேரம் வரை மௌனமாக இருந்து, பின்னர் அவரது பைஅத்தை ஏற்றுக் கொண்டார்கள். அப்துல்லாஹ் பின் அபீ ஸர்ஹ் திரும்பிச் சென்றதும், (இதைப் பற்றி) எழுதக் கூடிய அறிவிப்பாளர்கள் எழுதியிருப்பதென்னவென்றால், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஸஹாபிகளைப் பார்த்து, உங்களில் யாராவது ஒருவர் எழுந்து இவரை விரைவாகக் கொன்று விட வேண்டும் என்பதற்காகவே நான் சிறிது நேரம் மௌனமாக இருந்தேன் என்று கூறினார்கள். அதற்கு, ஸஹாபிகள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் எங்களுக்கு சைகையாக ஏன் தெரிவிக்கவில்லை? என்று கேட்டார்கள். அதற்கு, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஒரு நபி கொலை செய்வதற்காக சைகை செய்ய மாட்டார் என்று கூறினார்கள். சில அறிவிப்புகளில், ஒரு நபி கண்களால் துரோகம் செய்யலாகாது என்ற வார்த்தைகள் உள்ளன. எவ்வாறிருப்பினும், இந்த அறிவிப்பும் இது போன்ற ஒத்த அறிவிப்புகளும் சில வரலாற்று நூல்களில் இருப்பதால் நான் அதை எடுத்து வைக்கிறேன். ஆனால், இவை அனைத்தும் சந்தேகத்திற்குரியவையாக உள்ளன. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முன்மாதிரியும், அன்னாருடைய பொறுமையும், இவை அனைத்தும் போலியாக உருவாக்கப்பட்ட அறிவிப்புகள் என்பதையே நிரூபிக்கின்றன.

எவ்வாறிருப்பினும், ஹதீஸ் நூலான ஸுனன் நஸாயியில் இந்த அறிவிப்பு இவ்வாறு உள்ளது; மக்கா வெற்றியின் போது, அப்துல்லாஹ் பின் ஸஃது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் வீட்டில் ஒளிந்து கொண்டார். பிறகு பொது பைஅத் அறிவிக்கப்பட்ட போது, ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் அப்துல்லாஹ்வை அழைத்து வந்து, அப்துல்லாஹ்வின் பைஅத்தை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று வேண்டினார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தனது அருளுக்குரிய தலையை உயர்த்தி அவரைப் பார்த்தார்கள். இவ்வாறு மூன்று முறை செய்த பிறகு, அவரது பைஅத்தை ஏற்றுக் கொண்டார்கள். அதன் பிறகு ஸஹாபிகளை பார்த்து, நான் பைஅத் வாங்காததைக் கண்டபோது, உங்களில் எந்தப் புத்திசாலி மனிதரும் எழுந்து அவரைக் கொன்று விடவில்லையா? என்று கூறினார்கள். அதற்கு, ஸஹாபிகள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தங்கள் உள்ளத்தில் என்ன இருக்கிறது? என்று எங்களுக்கு எப்படித் தெரியும்? தாங்கள் ஏன் எங்களுக்குக் கண் அசைக்கவில்லை என்று கேட்டார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒரு நபி கண்களால் துரோகம் செய்வது அவரது மகிமைக்கு பொருத்தமானதல்ல.

இது நஸாயீயின் அறிவிப்பு. ஆனால், இது சரியானதாக இருக்க வேண்டும் என்று நம்ப வேண்டிய அவசியமில்லை. இந்த அறிவிப்பு ஸுனன் அபூ தாவூதிலும் உள்ளது. அத்துடன், ஸுனன் அபூதாவூதில் இதைத் தவிர வேறு ஓர் அறிவிப்பும் உள்ளது. ஆனால், அந்த அறிவிப்பில் இவ்வாறு வருகிறது; ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: அப்துல்லாஹ் பின் ஸஃது பின் அபீ ஸர்ஹ் என்பவர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் எழுத்தாளராக இருந்தார். ஷைத்தான் அவரை வழிதவறச் செய்தான். அவர் காஃபிர்களுடன் சேர்ந்து கொண்டார். மக்கா வெற்றியின் நாளில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவரைக் கொல்ல உத்தரவிட்டார்கள். ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்கள் அவருக்கு அடைக்கலம் கேட்டார்கள். அதன் பேரில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவருக்கு அடைக்கலம் கொடுத்தார்கள்.

இங்கு அப்துல்லாஹ் பின் ஸஃது தொடர்பான இத்தகைய அறிவிப்புகள் குறித்து தெளிவு பெற வேண்டிய விஷயம் என்னவென்றால், நான் முன்பும் கூறியது போல இந்த அறிவிப்பு எந்த ஹதீஸ் நூல்களில் வந்துள்ளதோ அதன் ஸனத் (அறிவிப்பாளர் சங்கிலி) குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டபோது, அது ஸனது ரீதியாக பலவீனமானது என்று தெரிய வந்துள்ளது. ஏன் கண் அசைக்கவில்லை? என்று கேட்பது, பெருமானார் (ஸல்) அவர்கள் நான் மௌனமாக இருந்தேன் என்று கூறுவது ஆகியவை எப்படிப்பட்ட விஷயங்கள் என்றால், பெருமானார் (ஸல்) அவர்கள் மன்னராக இருந்தார்கள் ; தெளிவாகக் கூறியிருக்க முடியும். எவ்வாறிருப்பினும், கவனிக்க வேண்டிய மற்றொரு முக்கியமான விஷயம் என்னவென்றால், இஸ்லாத்தில் முர்தத் ஆனவருக்கு எந்த தண்டனையும் கிடையாது. எனவே அப்துல்லாஹ் பின் ஸஃது முர்தத் ஆகிவிட்டார். ஆகவே அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது என்று கூறுவது சரியானதாக இருக்க முடியாது.

இது மட்டுமின்றி, இன்னொரு விஷயமும் கவனிக்கத்தக்கதாக உள்ளது. அது என்னவென்றால்,நான் ஏற்கனவே கூறியது போல இந்த சம்பவத்தின் விளக்கத்தில் கூறப்பட்ட விவரங்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கண்ணியத்திற்கு முரணாகத் தென்படுகின்றன. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களோ அந்நாளில் அல்லாஹ்வின் ஃகஃப்பார் (மன்னிப்பவன்), ஸத்தார் (குறைகளை திரையிடுபவன்) ரஹீம் (மீண்டும், மீண்டும் கருணை காட்டுபவன்) மற்றும் கரீம் (இரக்கம் காட்டுபவன்) ஆகிய பண்புகளின் முழுமையான வெளிப்பாடாக தென்பட்டார்கள். மன்னிப்புக் கேட்டு பிறகு அன்னாரால் மன்னிக்கப்படாத எந்த ஒரு நபரும் அங்கு தென்படவில்லை. அவர் மரண தண்டனை விதிக்கப்பட்டவராக இருந்தாலும் சரியே! இந்த ஹதீஸ் புஹாரீ மற்றும் முஸ்லிம் ஆகிய ஹதீஸ் நூல்களிலும் கூட இல்லை. மேலும், இந்த அறிவிப்பு ஹதீஸின் உண்மைத்தன்மைக்கு முரணாகத் தோன்றுகிறது. ஏனெனில், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஒரு வெற்றி பெற்ற தளபதியாகவும் இருந்தார்கள்.யாரையாவது கொல்ல கட்டளையிட வேண்டிய அவசியம் இருந்திருந்தால் யாருக்கும் பயப்பட வேண்டிய அவசியம் கிடையாது. சைகையோ அல்லது கண்ணசைப்போ எதற்கு தேவைப்பட்டது? ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் அப்துல்லாஹ்வை அழைத்து வந்தபோது, இல்லை, இவரது குற்றங்கள் மன்னிக்க முடியாதவை என்று தெளிவாகக் கூறியிருக்கலாம்.

அதே நாட்களில், பனூ மக்ஸூம் குலத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணின் திருட்டு வழக்கும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முன்னிலையில் கொண்டு வரப்பட்டது அல்லவா?. அவளுக்காகப் பெரும் பரிந்துரைகளும் செய்யப்பட்டன. ஹஸ்ரத் உம்மு ஸல்மா மற்றும் ஹஸ்ரத் உஸாமா பின் ஸைத் ஆகியோர் அவளுக்காகப் பரிந்துரை செய்தார்கள். ஆனால், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அனைத்து பரிந்துரைகளையும் நிராகரித்து விட்டு கையை வெட்டும் தண்டனையை உறுதி செய்தார்கள். ஆகவே, ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஸஃத்-ன் குற்றம் மிகவும் கடுமையானதாக இருந்திருந்தால் அவரது மன்னிப்பிற்கு இடமில்லை என்று தெளிவாகக் கூறியிருக்கலாம். ஆனால், அதற்கு பதிலாக பொதுவான ஒழுக்க நெறிகளுக்கும், பொதுவான மரபுகளுக்கும் முரணான ஒரு செயலை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களோடு தொடர்புபடுத்துவது ஏற்கத்தக்கல்ல.

அதாவது, அவர் பைஅத் செய்வதற்கு வந்தபோது, நவூதுபில்லாஹ் அந்த இடைப்பட்ட நேரத்தில் யாராவது அவரை விரைவாகக் கொன்று விட வேண்டும் என்பதற்காக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மௌனமாக இருந்தார்கள் (என்றும்), ஸஹாபிகள் அவ்வாறு செய்யாதபோது அன்னார் (ஸல்) , அவர்களிடம் ஏன் கொலை செய்யவில்லை? என்று கேட்டார்கள் (என்றும்) ஸஹாபிகள் அன்னாரிடம், தாங்கள் கண்ணால் சைகை செய்திருக்கலாமே என்று கூறியபோது, நபியின் கண் துரோகம் செய்யாது; ஆகவே கண்களால் சைகை செய்யவில்லை என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். (என்றும் கூறுவது ஏற்கத்தக்கதல்ல) அதாவது, யாராவது அவரை கொன்றிருக்க

வேண்டுமே! என்பதுதான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மன விருப்பமாக இருந்தது; ஆனால், அன்னார் (ஸல்) சைகை செய்யவில்லை என்று நிரூபிக்க விரும்புகிறார்கள் நவூதுபில்லாஹ்! இந்த அறிவிப்பின் அமைப்பே இந்த சம்பவத்தை மறுக்கிறது. இத்தகைய ஒரு விஷயம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைகளை நிலைநாட்டுவதில் ஒரு மலையைப் போன்று உறுதியாக இருந்தார்கள்; யாரையும் பொருட்படுத்த மாட்டார்கள். ஆனால், மன்னிப்பு மற்றும் கருணையின்போது பட்டுப் போல் மென்மையாகவும், மிருதுவாகவும் இருந்தார்கள். அவர்களுக்கு எந்தவிதமான கவலையும், சஞ்சலமும் இருந்ததில்லை. எனவே அப்துல்லாஹ் பின் ஸஃதின் பைஅத் தொடர்பான இத்தகைய அறிவிப்புகள் சந்தேகத்திற்குரியவை ஆகும். சில வரலாற்றாசிரியர்களும் வாழ்க்கை வரலாறு எழுதுபவர்களும் இவற்றை ஏற்க மறுத்துள்ளனர்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் சூரத்துல் முஃமினூன் உடைய 15-ம் வசனத்தின் விளக்கவுரையின்போது இந்த சம்பவத்தைப் பற்றி இவ்வாறு குறிப்பிடுகிறார்கள்: இந்த வசனத்துடன் ஒரு வரலாற்று சம்பவமும் தொடர்புடையது. அதை இங்கே விவரிப்பது அவசியமானதாகத் தோன்றுகிறது. ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களுக்கு அப்துல்லாஹ் பின் அபீ ஸரஹ் என்ற ஒரு வஹீ எழுதுபவர் இருந்தார். அன்னார் மீது ஏதேனும் வஹீ இறங்கும்போது அவரை அழைத்து எழுதச் சொல்வார்கள். ஒருநாள் அன்னார் (ஸல்) இதே வசனங்களை அவர் மூலமாக எழுத வைத்துக் கொண்டிருந்தார்கள். ثُمَّ اَنْشَاْنٰهُ خَلْقًا اٰخَرَ

பொருள்: (பின்னர் அதை நாம் மற்றொரு படைப்பாக வளர்ச்சியடையச் செய்தோம்) என்ற வசனத்தை அடைந்போது, அவரது வாயிலிருந்து தன்னிச்சையாக,

فَتَبٰرَكَ اللّٰهُ اَحْسَنُ الْخٰلِقِيْنَ

(படைப்போருள் மிகச் சிறந்தவனாகிய அல்லாஹ் மிக்க அருளுக்குரியவன் ஆவான்) என்று வெளிப்பட்டது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், இதுவும் வஹீயே, இதை எழுதிக் கொள்! என்று கூறினார்கள். முந்தைய வசனங்களின் விளைவாக இந்த வசனம் இயல்பாகவே உருவாகிவிடுகிறது என்று அந்த பேறிழந்தவருக்கு தோன்றவில்லை. என் நாவிலிருந்து வெளிப்பட்ட இந்த வசனத்தை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வஹீயாக ஆக்கியதுபோலவே நவூதுபில்லாஹ்! அன்னாரே முழு குர்ஆனையும் உருவாக்குகின்றார்களோ! என்று அவர் நினைத்துக் கொண்டார். இதனால் அவர் முர்தத் ஆகி மக்காவிற்குச் சென்றார். மக்கா வெற்றியின் போது, ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்கள் கொலை செய்யுமாறு உத்தரவிட்டவர்களில் அப்துல்லாஹ் பின் அபீ ஸர்ஹ்- ம் ஒருவர். ஆனால் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவருக்கு அடைக்கலம் கொடுத்திருந்தார்கள். அவர் மூன்று நாட்கள் அவர்களின் வீட்டில் ஒளிந்திருந்தார். ஒருநாள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மக்காவாசிகளிடம் பைஅத் வாங்கிக் கொண்டிருக்கும்போது, ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் அப்துல்லாஹ் பின் அபீ ஸர்ஹ்-ஐயும் அன்னாருக்கு முன் அழைத்து வந்து, அவரது பைஅத்தை ஏற்றுக் கொள்ளும்படி வேண்டினார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களோ முதலில் சிறிது நேரம் தயங்கினார்கள். ஆனால், பின்னர் அவரது பைஅத்தை ஏற்றுக் கொண்டார்கள். இவ்வாறு அவர் மீண்டும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார் என்று இவரைக் குறித்து இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

அப்துல்லாஹ் பின் அபீ ஸர்ஹ் அவர்கள் பிற்காலத்தில் இஸ்லாமிய தொண்டுகளைச் செய்த முக்கிய ஸஹாபிகளில் ஒருவராகக் கருதப்பட்டார் என்று அவர்களைக் குறித்து வருகிறது. எகிப்தின் ஆளுநராகவும் இருந்தார்கள். ஆஃப்ரிக்காவின் ஒரு பகுதியைக் கைப்பற்றியவர்கள், இவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்குப் பால்குடிச் சகோதரராக இருந்தபோதிலும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் ஷஹாதத்திற்குப் பிறகு இவர்கள் குழப்பங்களிலிருந்து விலகியே இருந்தார்கள். தனது கடைசிச் செயல் தொழுகையாக இருக்க வேண்டும் என்று துஆ செய்ததாகக் கூறப்படுகிறது. அதன்படி, ஒருநாள் காலை தொழுகைக்காக நின்றார்கள். தொழுகையை முடித்து வலதுபுறம் ஸலாம் கூறினார்கள். இடதுபுறம் ஸலாம் கூறத் தொடங்கியபோது அவர்கள் மரணமடைந்தார்கள். 36 அல்லது 37 ஹிஜ்ரியில் அவர்கள் மரணமடைந்தார்கள்.

பிறகு இக்ரிமா பின் அபீ ஜஹல் அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட குறிப்பு மக்கா வெற்றியின் போது ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்கள் கொலை செய்ய உத்தரவிட்டவர்களில் இக்ரிமா பின் அபீ ஜஹ்லும் அடங்குவார்.

இக்ரிமாவும் அவருடைய தந்தையும் ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்களுக்கு துன்பங்கள் கொடுத்து வந்தார்கள். முஸ்லிம்கள் மீது மிக அதிக கடுமை காட்டி வந்தார்கள். ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்கள் இவரை கொலை செய்ய கட்டளையிட்டிருப்பது தெரிய வந்தபோது அவர் ஏமனை நோக்கி ஓடினார். இஸ்லாத்தின் எதிர்ப்பில் இவர் தன் தந்தை அபூ ஜஹ்லை முந்தி விட்டிருந்தார். இவர் கொலை செய்யப்பட வேண்டும் என கட்டளையிடப்பட்டிருக்கவும் வாய்ப்பிருக்கிறது. அதே போன்று, இஸ்லாத்திற்கு எதிராக எப்போதும் முன்னணியில் இருந்த, இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு எதிராகத் தொடர்ந்து சதித் திட்டங்களை வகுத்துக் கொண்டிருந்த மக்காவின் தலைவர்கள் மக்கா வெற்றிக்குப் பிறகு தங்களது செயல்கள் எந்நிலையிலும் மன்னிக்கப்பட முடியாதவை என்றும், அவர்கள் கொலை செய்யப்படுவார்கள் என்றும், அவர்களே நினைத்திருக்கலாம். இவ்வாறு நினைத்துக் கொண்டு அவர்கள் தப்பி ஓடிவிட்டார்கள். உண்மையில், அவர்களுக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அளவு கடந்த கருணை, மன்னிப்பு பற்றி நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் இருக்கவில்லை. எனவே உயிரை காப்பாற்றிக் கொள்ள தப்பித்துக் கொள்வதே சிறந்தது என்று கருதினார்கள். ஆனால், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அளவு கடந்த கருணையும், மன்னிப்பும் அவர்களுக்குத் தெரிய வந்தபோது அவர்கள் மக்காவில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை நோக்கித் ஈர்க்கப்பட்டு வந்தார்கள். ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜரானார்கள்.

எவ்வாறிருப்பினும், மக்கா வெற்றியின் போதும் இஸ்லாமிய படையை முழுமையாக எதிர்த்த முன்னணி எதிர்ப்பாளர்களுள் இக்ரிமாவும் ஒருவர் ஆவார். அவர் தம்முடன் மக்காவின் துணிச்சலான இளைஞர்கள் அடங்கிய ஒரு குழுவைச் சேர்த்தார். அந்தக் குழுவில் ஸுஹைல் பின் அம்ர், ஸஃப்வான் பின் உமையா ஆகியோரும் இருந்தார்கள். அவர்கள் வாள்களை உருவி, நாங்கள் முஸ்லிம்களை மக்காவில் நுழைய விடமாட்டோம் என்று கூறினார்கள். ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களின் படையை எதிர்த்து நின்று போரிட்டார்கள். ஆனால், தங்களது இருபதுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் கொல்லப்பட்ட பிறகு இவர்கள்அனைவரும் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டார்கள். வரலாற்று ரீதியிலான அறிவிப்பின் அடிப்படையில் பார்க்கும்போது, இக்ரிமா கடல் மார்க்கமாக ஏமன் செல்ல தீர்மானித்திருந்தார். அவரது மனைவி உம்மே ஹக்கீம் ஹாரிஸ் பின் ஹிஷாம் - குறைஷிய தலைவருடைய மகளாக இருந்தாள். ஹிந்த் பின்த் உத்பா மற்றும் பிற கண்ணியத்திற்குரிய பெண்களுடன் சேர்ந்து அவர் மக்கா வெற்றியின் போது பைஅத் செய்திருந்தார்.

தம் கணவர் இக்ரிமா உயிருக்கு அஞ்சி ஏமன் நோக்கித் தப்பியோடுவதை அவர் அறிந்ததும், ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜராகி, இக்ரிமாவை கொல்ல தாங்கள் உத்தரவிட்டுள்ளீர்கள் என்று அவர் அஞ்சுகிறார்; தாங்கள் அவருக்கு அடைக்கலம் அளியுங்கள் என்று வேண்டினார். இதைக் கேட்டவுடன் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், அவர் அடைக்கலத்தில் இருக்கிறார் என்று கூறினார்கள். அவர் தனது அடிமையை அழைத்துக் கொண்டு ஜித்தாவை நோக்கிப் புறப்பட்டாள். அவர் இக்ரிமாவை கடற்கரையில் கண்டார்; அவர் ஒரு படகில் ஏற எண்ணியிருந்தார். இன்னொரு கூற்றுப்படி, அவர் படகில் ஏறிய பிறகு இக்ரிமாவை அவர் சந்தித்தார். என் சிறிய தந்தையின் மகனே! நான் உங்களிடம், மக்களில் அனைவரையும் விட நன்மையை விரும்புபவர் ஆகிய ஒருவரிடமிருந்து வந்திருக்கின்றேன். நீங்கள் உங்கள் உயிரை அழிவில் போடாதீர்; ஏனெனில் நான் உங்களுக்காகப் பாதுகாப்பு தேடியிருக்கின்றேன் என்று கூறி அவரை நிறுத்தினார்; இதைக் கேட்டு இக்ரிமா தம் மனைவியுடன் திரும்பி வந்தார்; அவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். மேலும் அவரது இஸ்லாம் மிகவும் அழகானதாக இருந்தது.

அறிவிப்பில் வருகிறது; இக்ரிமா, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜரானபோது, முஹம்மது (ஸல்) அவர்களே! எனது மனைவி நீங்கள் எனக்கு அடைக்கலம் அளித்ததாகக் கூறினார். அதாவது நான் நிராகரிப்பின் நிலையில் இருக்கும்போதே மக்காவில் வாழ அனுமதி அளித்தீர்கள் என்று கூறினார்.

அதாவது, நான் முஸ்லிமாக ஆக வேண்டிய கட்டாயமில்லை என்று கூறினாள் என்று இக்ரிமா கேட்டபோது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் நீர் உண்மை கூறினீர் ; நிச்சயமாக நீர் பாதுகாப்பில் இருக்கிறீர் என்று கூறினார்கள். இதைக் கேட்டதும் இக்ரிமா, அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் யாருமில்லை. அவன் ஏகனே. அவனுக்கு நிகரானவன் எவனுமில்லை. தாங்கள் அவனது அடியாரும் அவனது தூதரும் ஆவீர்கள் என்று நான் சாட்சி கூறுகிறேன் என்றார். அவர் வெட்கி தலை குனிந்தார். பிறகு, ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்கள் இக்ரிமாவைப் பார்த்து, இக்ரிமாவே! இன்று

நீங்கள் என்னிடம் எதைக் கேட்டாலும் அதற்கான ஆற்றல் இருக்கும் என்றால் நிச்சயமாக அதை உமக்கு வழங்குவேன் என்றார்கள். அதற்கு, இக்ரிமா நான் தங்களுடன் கொண்ட எல்லா பகையையும் மன்னிக்குமாறு (அல்லாஹ்விடம்) துஆ செய்யுங்கள் என்றார். அதற்கு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு துஆ செய்தார்கள்:

அல்லாஹ்வே! இக்ரிமா என்னுடன் கொண்ட எல்லா பகையையும் மன்னிப்பாயாக! அவர் (என்னைப் பற்றி) பேசிய எல்லா தீய விஷயங்களையும் மன்னிப்பாயாக. பின்னர், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்த நிலையில், தம் போர்வையை அவர் மீது போர்த்தி, ஈமான் கொண்ட நிலையிலும், ஹிஜ்ரத் செய்த நிலையிலும் எம்மிடம் வந்தவருக்கு நல்வரவு! என்று கூறினார்கள்.

இக்ரிமா ஈமான் கொண்டதன் பொருள் ஒரு முன்னறிவிப்பு நிறைவேறியதாகவும் குறிப்பு காணப்படுகிறது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:

இக்ரிமா நம்பிக்கை கொண்டதனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பல ஆண்டுகளுக்கு முன்பே தம் ஸஹாபிகளிடம் கூறிய ஒரு முன்னறிவிப்பு நிறைவேறியது. அவர்கள் கூறிய அந்த முன்னறிவிப்பாவது; நான் ஒரு கனவு கண்டேன். அந்தக் கனவில் நான் சுவர்க்கத்தில் இருக்கிறேன். அங்கு திராட்சைக் குலை ஒன்றை கண்டேன். இது யாருக்கு என்று மக்களிடம் கேட்டேன்; இது அபூ ஜஹ்லுக்கு என்றுஒருவர் பதிலளித்தார். இது எனக்கு வியப்பை அளித்தது; நம்பிக்கை கொண்டவர்களைத் தவிர வேறெவரும் சுவர்க்கத்தில் நுழைவதில்லையே! அப்படியிருக்க நம்பிக்கை கொள்ளாத அபூ ஜஹ்லுக்கு எவ்வாறு சுவர்க்கத்தில் திராட்சை வழங்கப்படவிருந்தது என்று எண்ணினேன். இக்ரிமா நம்பிக்கை கொண்டதும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அந்தத் திராட்சைக் குலை இக்ரிமாவுக்குரியதாகும் என்று கூறினார்கள். மகனுடைய பெயருக்குப் பதிலாகத் தந்தையின் பெயரை இறைவன் கூறியுள்ளான். கனவுகளில் பெரும்பாலும் இவ்வாறு காட்டப்படுவதுண்டு.

பிறகு ஹப்பார் பின் அஸ்வத் தப்பி ஓடியது. பின்னர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டது பற்றியும் குறிப்பு காணப்படுகிறது.அவர் அறியாமைக் காலத்தில் சிறந்த சொற்பொழிவாளராகவும், ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்களுக்கு எதிராக மக்களைத் திரட்டியவராகவும், மிகவும் மோசமான குணமுடையவராகவும் இருந்தார் என்பது எழுதப்பட்டுள்ளது. ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்களின் மகள் ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்கள் மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்தபோது, அவர் கர்ப்பமாக இருந்தார். ஹப்பார் பின் அஸ்வத் ஒட்டகத்தை வெருண்டோடச் செய்தார். அதன் காரணமாக ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்கள் ஒட்டகத்திலிருந்து விழுந்து விட்டார்கள். அதனால் அவர்களின் கர்ப்பம் கலைந்து விட்டது. அதன் காரணமாகவே அவர்கள் இறுதி காலம் வரை நோய்வாய்ப்பட்டிருந்தார்கள். ஹப்பார் எங்கு தென்பட்டாலும் அவர் கொல்லப்பட வேண்டும் என ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்கள் அவரை கொலை செய்வதற்கு கட்டளையிட்டிருந்தார்கள்.

மக்கா வெற்றியின் போது இவர் இந்த பயத்தினால் மக்காவிலிருந்து தப்பியோடி காட்டுப் பகுதியில் ஒளிந்து திரிந்து கொண்டிருந்தார். மக்கா வெற்றிக்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவிற்கு திரும்பிச் சென்றபோது, இவர் அங்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜரானார். இவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜரானபோது, ஸஹாபிகள் இவரைக் கண்டு அன்னாரிடம், ஹப்பார் வந்து கொண்டிருக்கின்றார் என்று கூறினார்கள். அதற்கு, அன்னார் (ஸல்) ஆம் நான் பார்த்து விட்டேன் ; அவரை ஒன்றும் செய்யாதீர்கள் என்று கூறினார்கள். ஹப்பார் நெருங்கி வந்து, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தங்கள் மீது ஸலாம் உண்டாகட்டும்; அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாரும் இல்லை ; என்றும் தாங்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) ஆவீர்கள் என்றும் நான் சாட்சி பகர்கிறேன். நான் தங்களை விட்டு தப்பியோடி அனைத்துப் பகுதிகளிலும் அலைந்தேன். நான் அரேபியர் அல்லாதவர்களுடன் கூட சேர விரும்பினேன். பிறகு அத்துமீறியவர்களுடன் தாங்கள் காட்டும் சிறப்புத்தன்மையையும், பெருந்தன்மையையும் நன்மையையும், மன்னிப்பையும் நான் நினைவுகூர்ந்தேன். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நாங்கள் இணை வைப்பாளர்களாக இருந்தோம்; அல்லாஹ் தங்கள் மூலம் எங்களுக்கு நேர்வழி வழங்கினான்; அழிவிலிருந்து காப்பாற்றினான். என் வரம்புமீறுதல்களையும், என்னிடமிருந்து தங்களுக்கு ஏற்பட்ட துன்பங்களையும் மன்னியுங்கள். எனது மோசமான நடத்தையையும் பாவங்களையும் நான் ஒப்புக் கொள்கிறேன் என்று கூறினார்.

அறிவிப்பாளர் கூறுகிறார்: நான் அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தேன். ஹப்பாரின் மன்னிப்புக் கோரலுக்குப் பிறகு வெட்கத்தின் காரணமாக அவர் தலையைத் தாழ்த்தி அமர்ந்திருந்தார். நான் உன்னை மன்னித்து விட்டேன்; இதற்கு முந்தைய பாவங்களை இஸ்லாம் மன்னித்து விடுகிறது என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களும் இந்த சம்பவத்தைப் பற்றி எழுதினார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகள் ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்களின் மரணத்திற்குக் காரணமாக இருந்த ஹப்பார் என்பவரும் மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களுள் ஒருவராக இருந்தார். ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்கள் அமர்ந்து சென்ற ஒட்டகத்தின் தொட்டில் கயிற்றை அவர் துண்டித்ததால் அவர்கள் அதிலிருந்து கீழே விழுந்தார்கள். இதனால் அவர்களின் கர்ப்பம் கலைந்து போயிற்று, அடுத்த சில நாட்களுக்குப் பிறகு அவர்கள் மரணமடைந்து விட்டார்கள். அவருடைய மற்ற குற்றங்களுடன் இந்த குற்றமும் சேர்ந்து விட்டது. ஆகவே மரண தண்டனைக்குரியவராக அவர் இருந்தார். இந்த நபரும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நான் தங்களை விட்டு வெருண்டோடி ஈரானுக்குச் சென்று கொண்டிருந்தேன். அப்போது இணை வைக்கக் கூடிய எங்களின் கொள்கைகளை அகற்றி, ஆன்மிக அழிவிலிருந்து எங்களை தனது நபியின் மூலம் இறைவன் காப்பாற்றி விட்டான். எனவே நான் மற்றவர்களிடம் செல்வதற்குப் பதிலாக அவரிடமே சென்று, நான் செய்த பாவங்களை ஒப்புக் கொண்டு அவரிடம் மன்னிப்புக் கோர வேண்டும் என்று என் மனம் கூறியது என்று கூறினார்.

இதனைக் கேட்டு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹப்பாரே! இறைவன் உங்கள் உள்ளத்தில் இஸ்லாத்தின் மீது நேசத்தை ஏற்படுத்தியிருக்கும்போது நான் ஏன் உங்கள் குற்றங்களை மன்னிக்கக் கூடாது? நிச்சயமாக நான் உங்களை மன்னித்து விட்டேன்; நீங்கள் இதற்கு முன் செய்த குற்றங்களையெல்லாம் இஸ்லாம் அழித்து விட்டது என்று கூறினார்கள்.

இவரைக் கூட மன்னித்து விட்டார்; ஆனால், அப்துல்லாஹ்வைப் பற்றி கூறப்படும்போது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் ஏன் எந்த சைகையும் செய்யவில்லை என்று ஸஹாபிகள் கேட்டதாக நம்பப்படுகிறது.

எவ்வாறிருப்பினும், கஅப் பின் ஸுஹைர் பின் அபீ அஸ்லமீ என்ற ஒருவரும் இருந்தார். ஹிஜ்ரி 7-ல் கஅபும் அவரது சகோதரர் புஜைரும் அப்ரக் என்ற இடத்திற்கு வந்தார்கள். இது பஸ்ராவிலிருந்து மதீனாவிற்கு செல்லும் பாதையில் அமைந்துள்ள பனூ அஸ்வத் இனத்தவரின் கிணறு ஆகும். புஜைர் அங்கிருந்து மதீனாவுக்குச் சென்று இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு விட்டார். இதனால் கஅப் மிகவும் கோபமடைந்தார். அவர் அவதூறு கவிதைகளை எழுதி வந்தார். பொதுவான அறிவிப்புகளின்படி, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இந்த அவதூறு கவிதைகளின் காரணமாக கஅபைக் கொலை செய்யும்படி கட்டளையிட்டதாகத் தெரிகிறது. ஆனால், உண்மையான விஷயம் இது மட்டுமல்ல. மாறாக, கஅபும், புஜைரும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குத் தீங்கு இழைப்பதற்கு மட்டும் அல்ல. மாறாக கொலை செய்வதற்கும் சதித் திட்டம் தீட்டியிருந்தனர் என்றும் சில சான்றுகளிலிருந்து தெரிய வருகிறது. இந்த நோக்கத்தின் காரணமாகத் தான் கஅப் மதீனாவிலிருந்து தொலைவில் தங்கியிருந்து கொண்டு, தனது சகோதரனை மதீனாவிற்கு அனுப்பினார். ஆனால், புஜைர் இஸ்லாமை ஏற்றுக் கொண்டார். தனது சகோதரன் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட செய்தி கஅபிற்கு தெரிந்ததும், அவர் மிகவும் கோபமடைந்தார். அதன் பிறகு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தாயிஃபிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்தபோது, புஜைர் தனது சகோதரர் கஅப் பின் ஸுஹைருக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சமூகத்தில் வந்து தனது தவறுகளுக்கு மன்னிப்புக் கோரி, தவ்பா செய்யுமாறு கேட்டுக் கொண்டார். ஏனெனில், தவ்பா செய்து அன்னாரிடம் வந்து சேரும் ஒவ்வொருவரையும் அன்னார் (ஸல்) மன்னித்து விடுகிறார்கள் என்று எழுதி இருந்தார். கடைசியில், கஅபிற்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சமூகத்தில் வருவதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை. எனவே கஅப் ஒரு கவிதை எழுதினார். அந்தக் கவிதையின் முதல் வரி இவ்வாறாகும்.

بَانَتْ سُعَادُ فَقَلْبِی الْیَوْمَ مَتْبُوْلُ

பொருள்: ஸுஆத் என்னை விட்டுப் பிரிந்து விட்டான்; துக்கத்தின் மிகுதியால் என் இதயம் துண்டுகளானது.

இதற்குப் பிறகு, கஅப் பின் ஸுஹைர் புறப்பட்டு மதீனா வந்து சேர்ந்தார். அங்கு தமக்கு தெரிந்த ஒருவரின் வீட்டில் தங்கினார்.

மறுநாள், அந்த நபர் கஅபை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடத்தில் அழைத்து வந்தார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் காலைத் தொழுகையை முடித்ததும், இவர்கள்தான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஆவார்கள்; எழுந்து நின்று அன்னாரிடம் பாதுகாப்பை வேண்டுங்கள் என்று அன்னாரைச் சுட்டிக் காட்டி அந்த நபர் கஅபிடம் கூறினார். அவர் எழுந்து சென்று அன்னாருக்கு முன்னால் அமர்ந்து, தனது கையை அன்னாரின் கையில் கொடுத்தார். அன்னாருக்கோ அல்லது ஸஹாபிகளுக்கோ கஅப் பின் ஸுஹைரை அடையாளம் தெரியவில்லை. கஅப் அன்னாரிடம், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! கஅப் பின் ஸுஹைர் தங்களிடம் தனது உயிருக்கு பாதுகாப்பு தேடியும், தவ்பா செய்து முஸ்லிமாக ஆகுவதற்கும் (இங்கு) வந்து சேர விரும்புகிறார்; நான் அவரை தங்களிடம் அழைத்து வந்தால், தாங்கள் அவரது தவ்பாவை ஏற்றுக் கொள்வீர்களா? என்று கேட்டார். அதற்கு அன்னார் (ஸல்) ஆம்! என்று கூறினார்கள்.

அப்போது, கஅப், நானே கஅப் பின் ஸுஹைர் ஆவேன் என்றார். இதைக் கேட்டாலும் ஓர் அன்ஸாரி முஸ்லிம் எழுந்து நின்று, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அல்லாஹ்வின் இந்த பகைவனை என்னிடம் ஒப்படையுங்கள். நான் அவனது கழுத்தைத் துண்டிக்கிறேன் என்று கூறினார். ஆனால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களோ, அவரைப் செல்ல விடுங்கள்; இந்த நபர் தவ்பா செய்யவும், வருத்தத்தை வெளிப்படுத்தவும் வந்துள்ளார் என்று கூறினார்கள்.

கஅப் தனது கவிதையான பானத் ஸுஅதைப் படித்தார். மேலும் அதில்

اِنَّ الرَّسُوْلَ لَنُوْرٌ يُسْتَضَاءُ بِهٖ
مُهَنَّدٌ مِنْ سُيُوْفِ اللهِ مَسْلُوْلُ

என்ற இடத்தை அடைந்தார். நிச்சயமாக ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எப்படிப்பட்ட ஒளி என்றால், அவர்களிடமிருந்து உண்மையின் ஒளி பெறப்படுகிறது.மேலும், அவர்கள் அல்லாஹ்வின் வாள்களுள் உருவப்பட்ட ஒரு கூரிய இந்திய வாள் ஆவார்கள் என்ற இந்த வரியை அடைந்தபோது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தம் உடலில் இருந்த போர்வையை ஹஸ்ரத் கஅப் மீது போர்த்தினார்கள். இந்தப் போர்வை காரணமாகவே இந்தக் கவிதை "கஸீதா புர்தா" (போர்வைக் கவிதை) என்ற பெயரில் பிரபல்யமானது. புர்தா என்றால், போர்வை என்று பொருள்; இது "கஸீதா பானத் ஸுஅத்" என்றும், ''கஸீதா புர்தா'' என்றும் அழைக்கப்படுகிறது. பிற்காலத்தில் ஹஸ்ரத் அமீர் முஆவியா அவர்கள் ஒரு பெரிய தொகைக்கு ஹஸ்ரத் கஅபிடம் இருந்து இந்தப் போர்வையை வாங்க முயன்றார். ஆனால், "நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் இந்த அருளுக்குரிய உடையைப் பிரிய மாட்டேன்" என்று அவர் கூறி மறுத்து விட்டார். ஆனால், ஹஸ்ரத் கஅப் அவர்கள் மரணமடைந்த பிறகு ஹஸ்ரத் அமீர் முஆவியா அவர்கள் கஅபின் வாரிசுகளிடம் இருந்து இந்தப் போர்வையை விலைக்கு வாங்கிக் கொண்டார். அதன் பிறகு, இந்தப் போர்வை பனூ உமையா ஆட்சியாளர்களுக்கு பரம்பரைச் சொத்தாக மாறி வந்து கொண்டிருந்தது. மேலும் அவர்களின் ஆட்சி சரிந்த நேரத்தில் அது வீணாகிப் போனது.

பொதுமக்களிடையே கஸீதா புர்தா என்ற பெயரில் மற்றொரு கவிதையும் மிகவும் பிரபலமாக உள்ளது. அது இமாம் ஷர்ஃபுத்தீன் பூஸீரி அவர்களின் கவிதை ஆகும். இதுவும் கஸீதா புர்தா என்று ஏன் அழைக்கப்படுகிறது? என்றால், இவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவத்தில் இந்த கவிதையை எழுதியபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கனவில் இவருக்கு தனது அருளுக்குரிய போர்வையைப் போர்த்தினார்கள். அது இவர் கண் விழித்த பிறகும் இவருடைய தோளில் இருந்தது. இமாம் பூஸீரி அவர்கள் மாற்றுத்திறனாளி என்றும், இந்தப் போர்வையின் அருளால் குணமடைந்தார் என்றும் கூறப்படுகிறது. எவ்வாறிருப்பினும், இது ஒரு கதையாக எடுத்துரைக்கப்படுகிறது. இத்தகைய கதைகளும் உள்ளன.

எவ்வாறிருப்பினும், இன்னும் சில கடும் எதிரிகள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட குறிப்பும்,அவர்களுக்கு எவ்வாறு மன்னிப்பு கிடைத்தது என்பது பற்றிய குறிப்பும் உள்ளது. இந்த குறிப்புகளை நான் எதிர்வரும் காலத்தில் எடுத்துரைப்பேன்.

அடுத்த வெள்ளிக்கிழமை இன்ஷா அல்லாஹ்! ஜமாஅத் அஹ்மதிய்யா பிரிட்டனுடைய ஆண்டு மாநாடும் தொடங்குகிறது.அதற்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் தனது அருளால் மாநாட்டை அருளுக்குரியதாக ஆக்குவானாக! மேலும் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் தனது அருளால் சிறப்பானதாக்குவானாக! விஷமத்தனம் மற்றும் தீங்கு செய்யக் கூடிய ஒவ்வொருவரிடமிருந்தும் அல்லது தீங்கு விளைவிக்க எண்ணம் கொண்டிருக்கும் ஒவ்வொரு நபரின் தீங்கிலிருந்தும் அல்லாஹ் பாதுகாப்பானாக!. உள்நாட்டிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும் வரும் விருந்தினர்களை அல்லாஹ் பாதுகாப்பாக கொண்டு வந்து, இங்கு அவர்களை எல்லா வகையிலும் தனது பாதுகாப்பில் வைத்திருப்பானாக! மாநாட்டிற்கு வரும் மக்களுடைய தனிப்பட்ட விருந்தினர்களாக இருந்தாலும் சரி அல்லது ஜமாஅத் ஏற்பாட்டின் கீழ் வரும் விருந்தினர்களாக இருந்தாலும் சரி; அவர்களுக்கு விருந்தோம்பல் துறையின் கீழ் ஏற்பாடு செய்யப்படுகிறது. விருந்தோம்பல் செய்யும் ஒவ்வொருவருக்கும் அந்த விருந்தினர்களின் விருந்தோம்பலின் உரிமையை நிறைவேற்றக் கூடிய நல்வாய்ப்பை அல்லாஹ் வழங்குவானாக! உற்சாகத்துடனும், ஆர்வத்துடனும் ஊழியர்கள் ஆண்டு மாநாட்டில் வேலை செய்வதற்கு தங்களை முன்நிறுத்துகிறார்கள். அவர்கள் தமது துறையில் தன்னலமற்ற சேவை செய்ய அல்லாஹ் அவர்கள் அனைவருக்கும் நல்வாய்ப்பு வழங்குவானாக! மேலும் மிகவும் கண்ணியத்துடனும், மரியாதையுடனும், மென்மையுடனும், இனிமையான மனதுடனும் அவர்கள் விருந்தினர்களுக்கு சேவை செய்ய வேண்டும்.

சில சமயங்களில் வேலைப்பளு மற்றும் தூக்கமின்மை காரணமாக சில ஊழியர்களின் இனிமையான இயல்பு பாதிக்கப்படுகிறது. ஆனால், எந்தத் துறையில் கடமையாற்றினாலும் ஒவ்வோர் ஊழியரும், நமக்கு அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் விருந்தினர்களுக்கு சேவை செய்யும் நற்பேறை வழங்கியுள்ளான்; அதற்கான வாய்ப்பை வழங்கியுள்ளான் என்று எண்ணியவாறு இந்நாட்களை கழிக்க வேண்டும். எனவே இதற்காக நாம் எல்லாவிதமான தியாகத்தையும் செய்தவாறு தமது சேவை உணர்வை நிலைநிறுத்துவோம்; எந்த விதமான கசப்பான மனதையும் வெளிப்படுத்த மாட்டோம்; எப்போதும் முகத்தில் புன்னகை வைத்திருப்போம் (என்று எண்ணத்துடன் இந்நாட்களை கழிக்க வேண்டும்) இளம் பெண்கள் அல்லது பெண்கள் அல்லது இளைஞர்கள் அல்லது பெரிய வயது ஆண்கள், அதிகாரிகள் அல்லது உதவியாளர்கள், உணவு சமைப்பவர்கள் மற்றும் லங்கர் நிர்வாகத்தை நடத்தும் ஊழியர்கள் அல்லது உணவு பரிமாறும் ஊழியர்கள் பாதுகாப்பு ஊழியர்கள் அல்லது வாகன நிறுத்துமிட ஊழியர்கள், தூய்மை மற்றும் சுகாதார ஊழியர்கள் அல்லது உட்புற மற்றும் வெளிப்புறங்களில் Signal கொடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள் அல்லது நுழைவு வாயிலில் நியமிக்கப்பட்டுள்ளவர்கள், குழந்தைகளுடைய பகுதியில் பணியாற்றக் கூடிய பெண்கள் அல்லது Main மாநாட்டுத் திடலில் பணியாற்றக் கூடிய சிறுமிகள், பெண்கள், ஆண்கள் என அனைவரும் எப்போதும் தம் முகத்தில் புன்னகையுடன் தம் பணிகளை நிறைவேற்ற வேண்டும். அல்லாஹ் இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!

அத்துடனே, எவருக்கும் எவ்வித விஷமத்தனமும் செய்ய துணிவு பிறக்காத வகையில் ஒவ்வொருவரின் மீதும் ஓர் ஆழமான பார்வையும் வைத்திருக்க வேண்டும். அனைத்து ஊழியர்களும் அழகிய முறையில் தொண்டாற்றக் கூடிய நல்வாய்ப்பை அல்லாஹ் வழங்குவானாக! அல்லாஹ்வின் அருள்களைப்பெறக் கூடியவர்களாக ஆவார்களாக!

தமிழாக்கம்

முரப்பி A.P.A தாரிக் அஹ்மது

* * * * * * * *

திருக்குர்ஆனிலிருந்து...

**நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)**

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

12-ம் பக்கத் தொடர்ச்சி...(குத்பா பேருரை

நாயகம் (ஸல்) அவர்கள் எவரையும் தனிப்பட்ட விஷயங்களுக்காக பழிவாங்கியது கிடையாது.

கைபரில் யூதப் பெண்மணி அன்னாருக்கு விஷயம் கொடுத்தார். அவரை கொலை செய்வதற்கு கட்டளை பிறப்பிக்கப்படுமா? என்று அவர் தொடர்பாக மக்களும் கேட்கவும் செய்தனர். ஆனால், கூடாது என்றே கட்டளை வந்தது. கைபரின் குஃப்ருஸ்தானின் ஓர் யூதப் பெண்மணி ரஹ்மத்துல் ஆலமின் (ஸல்) அவர்களுக்கு விஷம் கொடுத்த பிறகும் கூட உயிர் தப்பியிருக்க முடியும் என்றால், பின்னர் ஹரமில் அதை விட கீழான குற்றம் புரிந்த குற்றவாளிகள் நபியின் மன்னிப்பிலிருந்து எப்படி இழப்பிற்குரியவர்களாக இருக்க முடியும்? **(இதன் தொடர்ச்சி அடுத்த இதழில்)**

தமிழாக்கம்

முரப்பி அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * * *

# ஜுமுஆ பேருரை

**மக்கா வெற்றிப் போரின் பின்னணியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூய வாழ்க்கை**

ஹிஜ்ரத்திற்கு முன்னர் ஒருமுறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், உஸ்மான் பின் தல்ஹா அவர்களிடம் கஅபாவின் திறவுகோலை கேட்டார்கள்; அப்போது, அவர் பதில் அளித்தவாறு இறைத் தூதர் (ஸல்) அவர்களை ஏசிப்பேசினார். மேலும், மிகவும் மோசமான வார்த்தைகளை பயன்படுத்தினார். அன்னார் (ஸல்) அந்த நேரத்தில் மிகவும் பொறுமையை மேற்கொண்டார்கள். மேலும், கூறினார்கள்:

يَا عُثْمَانُ لَعَلَّكَ سَتَرَى هٰذَا الْمِفْتَاحَ يَوْمًا بِيَدِيْ أَضَعُهُ حَيْثُ شِئْتُ

பொருள்: உஸ்மானே! நினைவிற் கொள்; இந்த திறவுகோல் ஒருநாள் இல்லையென்றால் ஒருநாள் எனது கைக்கு வரும்; மேலும், நான் எனது விருப்பத்தின்படி எவருக்கு விரும்புவேனோ அவருக்கு கொடுப்பேன்.

மக்கா வெற்றி நாளன்று இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கஅபத்துல்லாஹ்வில் இருந்து வெளியில் வந்தவாறு உஸ்மான் பின் தல்ஹா அவர்களை அழைத்தார்கள். மேலும் அன்னாரிடம் திறவுகோலை திருப்பிக் கொடுத்து விட்டார்கள்; மேலும், اَلْيَوْمُ يَوْمُ بِرٍّ وَّوَفَاءٍ என்று கூறினார்கள்.

பொருள்: இன்று நன்மை மற்றும் உடன்படிக்கையை நிறைவேற்றுகின்ற நாளாகும்

தற்போதைய உலகின் நிலைமைகளுக்காக தொடர்ந்து துஆக்களும் செய்யுமாறும் அத்தியாவசிய பொருட்களை சேமித்து வைக்குமாறும் அறிவுரை

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 11 ஜூலை 2025** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1404 ஆண்டு **வஃபா** மாதம் **11 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

சென்ற இதழின் தொடர்ச்சி....... .

ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இறைத் தூதர் (ஸல்) அவர்கள் வருகை தந்தார்கள்; மேலும் மக்காவில் நுழைந்தார்கள். மேலும் இறைத் தூதர் (ஸல்) அவர்கள் ஹஜ்ரே அஸ்வத் பக்கம் சென்றார்கள். மேலும், அதனை முத்தமிட்டார்கள். அதாவது ஹஜ்ரே அஸ்வதை முத்தமிட்டார்கள். பின்னர் பைத்துல்லாஹ்வை வலம் வந்தார்கள். பின்னர் ஸஃபா குன்றின் மீது ஏறினார்கள். அங்கிருந்து அன்னார் (ஸல்) பைத்துல்லாஹ்வை பார்த்துக் கொண்டிருந்தார்கள். மேலும், அன்னார் (ஸல்) இரு கரங்களையும் உயர்த்தினார்கள். மேலும் கண்ணியமும், கம்பீரமும் மிக்க அல்லாஹ்வை நினைவு கூர்ந்தார்கள். அல்லாஹ் எவ்வளவு விரும்பினானோ அவ்வளவு அன்னார் (ஸல்) அவனை நினைவு கூர்ந்தார்கள். மேலும் அவனிடம் துஆ வேண்டிக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கீழே அன்ஸாரி ஸஹாபிகள் இருந்தனர். அன்னானர் (ஸல்) துஆ செய்தார்கள். மேலும் அல்லாஹ்வை புகழ்ந்தார்கள். மேலும், துஆ செய்தார்கள். அவன் எவ்வளவு விரும்பினானோ அவ்வளவு துஆ செய்தார்கள். (ஸுனன் அபூ தாவூத், ஹதீஸ் எண்: 1872)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மும்முரமான பணிகள் மற்றும் மக்காவாசிகளுடன் அழகிய நடத்தையின் நம்ப முடியாத காட்சிகளைக் கண்டவாறு அன்ஸார் தங்களது சிந்தனைகளிலேயே மூழ்கி விட்டார்கள். அன்னார் (ஸல்) மீது தமது தேசத்தின் நேசம் மற்றும் தமது கோத்திரத்தின் நேசம் மிகைத்து விட்டது ; மேலும் அநேகமாக அன்னார் (ஸல்) இங்கேயே தமது ஊரில் தமது அன்பிற்குரிய உறவினர்களுடன் தங்கி விடுவார்கள் என்று அவர்கள் ஒருவர் மற்றவரிடம் பேசிக் கொண்டனர். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பிரிவை சிந்தித்தவாறே அவர்கள் வேதனையடைந்து விட்டார்கள்.

ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அன்ஸாரிகளின் நிலை இவ்வாறு இருந்தபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அதற்கிடையில் வஹீ இறங்கியது. மேலும் வஹீ வந்தபோது, அது எங்களிடம் இருந்து மறைவாக இருக்கவில்லை. எனவே அது வரும்போது எங்களில் எவருமே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பக்கம் பார்வையை உயர்த்தி பார்க்க மாட்டார்; எதுவரை என்றால், வஹீ முடிந்து விட்டது. மேலும் வஹீ நிறைவடைந்துவிட்டபோது, அன்ஸாரிகளின் கூட்டத்தினரே! என்று இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே!, நாங்கள் ஆஜராக இருக்கின்றோம் என்று அவர்கள் கூறினர். அன்னார் (ஸல்) கூறினார்கள்: இந்த நபரின் மீது தேசத்தின் நேசம் மிகைத்து விட்டது என்று நீங்கள் எண்ணிக் கொண்டிருக்கின்றீர்களா? அதற்கு, அவ்வாறே! என்று அவர்கள் கூறினர். அன்னார் (ஸல்) கூறினார்கள்:

அப்படியென்றால் எனது பெயர் என்னவாக இருக்கும்? நான் முஹம்மது ஆவேன். நான் அல்லாஹ்வின் அடியாரும், அவனது தூதரும் ஆவேன்; நான் அல்லாஹ்விற்காக உங்களிடம் ஹிஜ்ரத் செய்திருந்தே; இனி நான் உங்களுடனேயே உயிர்வாழ்வேன்; மேலும் உங்களுக்கு மத்தியிலேயே மரணிப்பேன். அதைக் கேட்டு (அன்ஸார் ஸஹாபிகளாகிய) அவர்கள் தங்களை கட்டுப்படுத்த முடியாமல் அழுதவாறு அன்னாரை நோக்கி முன்னேறிச் சென்றார்கள்: மேலும் கூறினார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! நாங்கள் என்னவெல்லாம் கூறினோமோ அது அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் மீதான கடும் நேசத்தின் காரணமாகவும், தங்களை பிரியும் அச்சத்தின் காரணமாகவும் கூறியிருந்தோம். இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்;

நிச்சயமாக அல்லாஹ்வும், அவனது தூதரும் உங்களுடைய இந்தக் கூற்றை உண்மைப்படுத்துகின்றார்கள். மேலும், உங்களது காரணத்தை ஒப்புக் கொள்கின்றார்கள். (ஸஹீஹ் முஸ்லிம், ஹதீஸ் எண்: 3317-3318)

இந்த சம்பவத்தைப் பற்றி குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் எடுத்துரைக்கின்றார்கள்:

கண்ணியத்திற்குரிய இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கஅபத்துல்லாஹ்வை வலம் வருவது தொடர்பான இறை வணக்கங்களில் மும்முரமாக இருந்தார்கள். மேலும், தமது சமுதாயத்துடன் மன்னிப்பு மற்றும் கருணையின் நடைமுறைகளை முன்னெடுத்துக் கொண்டிருந்தார்கள். அப்போது அன்ஸார் ஸஹாபிகள் உள்ளுக்குள்ளேயே மனதளவில் சோர்ந்து போய் கொண்டிருந்தார்கள். மேலும், அவர்கள் ஒருவர் மற்றவரிடம் சைகையால், இவ்வாறு கூறிக் கொண்டிருந்தார்கள். அதாவது அநேகமாக நாம் இறைவனின் தூதரை நம்மிடமிருந்து பிரிந்து கொண்டிருக்கின்றோம். ஏனெனில், அன்னாருடைய நகரத்தை அன்னாரின் கைகளால் வல்ல இறைவன் வெற்றிக் கொள்ளச் செய்து விட்டான். மேலும் அன்னாரின் கோத்திரம் அன்னாரின் மீது நம்பிக்கை கொண்டுள்ளது. அந்த நேரத்தில் அல்லாஹ் ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு வஹீயின் மூலமாக அன்ஸார் ஸஹாபிகளின் அந்த ஐயங்களை குறித்து தகவல் கொடுத்து விட்டான். அன்னார் (ஸல்) தலையை உயர்த்தினார்கள். மேலும் அன்ஸாரை நோக்கி பார்த்தார்கள். மேலும் கூறினார்கள்: அன்ஸார் கூட்டத்தினரே! முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை தமது நகரத்தின் மீதான வாட்டிக் கொண்டிருக்கின்றது என்றும், மேலும் தமது சமுதாயத்தின் மீதான நேசத்தால் அவரது உள்ளம் பூரித்துக்

கொண்டிருக்கின்றது என்றும் நீங்கள் கருதுகின்றீர்களா? அதற்கு, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இது உண்மை தான் ; எங்களது உள்ளங்களில் அப்படிப்பட்ட எண்ணம் தோன்றின என்று அன்ஸார் கூட்டத்தினர் கூறினர். எனது பெயர் என்னவென்று உங்களுக்கு தெரியுமா? என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

பொருள் என்னவென்றால், நான் அல்லாஹ்வின் அடியார் என்றும், அவனது தூதர் என்றும் அழைக்கப்படுகின்றேன். அவ்வாறிருக்க, மார்க்கத்தின் பலவீனமான காலத்தில் தங்களது உயிர்களை தியாகம் செய்த உங்களை விட்டு விட்டு வேறோர் இடத்திற்கு எப்படி நான் செல்வேன்? அன்னார் (ஸல்) கூறினார்கள்:

அன்ஸார் கூட்டத்தினரே! அப்படி ஒருபோதும் நடக்க முடியாது; நான் அல்லாஹ்வின் அடியாரும், அவனது தூதரும் ஆவேன்; நான் இறைவனுக்காக எனது தேசத்தை துறந்தேன்; மேலும் அதன் பிறகு இனி நான் எனது தேசத்திற்கு திரும்பி செல்ல முடியாது; எனது வாழ்வும் உங்களுடன் தான் உள்ளது; மேலும் எனது மரணமும் உங்களுடன் தொடர்பு கொண்டுள்ளது; மதீனாவாசிகள் இந்த விஷயங்களை செவியுற்றும், அன்னாரின் நேசம் மற்றும் நன்றியுணர்வைக் கண்டு அழுதவாறும் முன்னேறிச் சென்றார்கள்; மேலும் கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இறைவன் மீது ஆணையாக! நாங்கள் இறைவன் மீதும் அவனது தூதரின் மீதும் தப்பெண்ணம் கொண்டு விட்டோம்; விஷயம் என்னவென்றால், இறைவனின் தூதர் எங்களையும், எங்களது நகரத்தையும் விட்டு விட்டு வேறோர் இடத்திற்கு சென்றுவிடுவார் என்ற எண்ணத்தை எங்களது உள்ளத்தால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

அன்னார் (ஸல்) கூறினார்கள்: அல்லாஹ் மற்றும் அவனது தூதர் உங்களை குற்றமற்றவர்களாக கருதுகின்றனர். மேலும் உங்களது களங்கமற்றத் தன்மையை உண்மைப்படுத்துகின்றனர்.

முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மற்றும் மதீனத்து மக்களுக்கு மத்தியில் இந்த அன்பு மற்றும் நேசத்திற்கான விஷயங்கள் நிகழ்ந்து கொண்டிருந்தபோது, மக்காவாசிகளின் கண்கள் கண்ணீர் சிந்தாமல் இருந்திருக்கலாம். ஆனால், அவர்களின் உள்ளம் நிச்சயமாக கண்ணீர் வடித்திருக்கும். அதாவது விலைமதிப்பற்ற அந்த வைரம் அதாவது எதனை விட விலைமதிப்புள்ள ஒரு பொருள் இந்த உலகில் தோன்றவேயில்லையோ அதனை இறைவன் அவர்களுக்கு கொடுத்திருந்தான். ஆனால், அவர்கள் அவரை தமது வீடுகளில் இருந்து வெளியேற்றி வீசிவிட்டார்கள். மேலும், தற்போது அவர் இறைவனின் அருள் மற்றும் உதவியால் மீண்டும் மக்காவில் வந்திருந்தார். அவர் தமது உடன்படிக்கையை முழுமை செய்யும் காரணத்தால் தமது விருப்பம் மற்றும் தமது மகிழ்ச்சியுடன் மக்காவை விட்டு மதீனாவிற்கு திரும்பி சென்று கொண்டிருக்கின்றார் என்று மக்காவாசிகளின் உள்ளம் கண்ணீர் வடித்திருக்கும். (தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம், தொகுதி 20, பக்கம்348-349)

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களிடமிருந்து ஓர் அறிவிப்பு உள்ளது. அதாவது அபூ ஸுஃப்யான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைக் கண்டார். அன்னார் (ஸல்) சென்று கொண்டிருந்தார்கள். மேலும் ஸஹாபிகள் அன்னாருக்குப் பின்னால் சென்று கொண்டிருந்தார்கள். அந்தோ! நான் இவர்களுடன் மீண்டும் போர் செய்திருக்க வேண்டுமே! மேலும் அவர்களுக்கு எதிராக படையை திரட்டியிருக்க வேண்டுமே! என்று அவர் உள்ளத்தில் கூறினார். அன்னார் (ஸல்) வருகை தந்தார்கள். மேலும் அவரது நெஞ்சின் மீது தமது கரத்தால் அடித்தார்கள். மேலும் கூறினார்கள்: அப்போது அல்லாஹ் உம்மை மீண்டும் இழிவுபடுத்தி விடுவான் என்று கூறினார்கள். மீண்டும் போர் புரிந்திருக்கலாமே? என்று நீர் சிந்தித்துக் கொண்டிருக்கின்றீர் ; அவ்வாறு செய்திருந்தால் அல்லாஹ் உம்மை மீண்டும் இழிவுபடுத்தியிருப்பான். அதற்கு, அவர் கூறினார்:

நான் அல்லாஹ்வின் சன்னிதானத்தில் தவ்பா செய்கின்றேன்; மேலும் நான் என்னவெல்லாம் கூறினேனோ அதற்காக அல்லாஹ்விடம் மன்னிப்பு வேண்டுகின்றேன்; தாங்கள் அல்லாஹ்வின் உண்மையான நபி ஆவீர்கள் என்று தற்போது எனக்கு உறுதி ஏற்பட்டு விட்டது. அவர் கூறுகின்றார்:

நானோ உள்ளத்தில் இந்த விஷயத்தை எண்ணிக் கொண்டிருந்தேன்; நான் எவரிடமும் அதனைக் கூறவே இல்லை; ஆனால், அன்னார் (ஸல்) அந்த விஷயத்தை என்னிடம் வெளிப்படுத்தி விட்டார்கள்.
(ஸுபுலுல் ஹுதா, தொகுதி 5, பக்கம் 246, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

கஅபத்துல்லாஹ்வின் கூரையின் மீதிருந்து லுஹர் பாங்கு கொடுக்கப்பட்டது. லுஹர் தொழுகைக்கான நேரமானபோது, அன்னார் (ஸல்) ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களுக்கு கட்டளையிட்டார்கள். அன்னார் (ரலி) கஅபத்துல்லாஹ்வின் கூரையின் மீது ஏறி நின்று பாங்கு கொடுத்தார்கள்.
(ஸுபுலுல் ஹுதா, தொகுதி 5, பக்கம் 248, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த நாளன்று அனைத்து தொழுகைகளையும் ஒரே உளூவில் தொழுதார்கள் என்று அறிவிப்பில் உள்ளது.

பொதுவாக ஒவ்வொரு தொழுகைக்கும் புதிதாக உளூ செய்து வருவது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அருளுக்குரிய பழக்கமாக இருந்தது. ஆனால், இன்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஒரே உளூவைக் கொண்டு (அனைத்து) தொழுகைகளையும் தொழுதவாறு ஸஹாபிகள் கண்டபோது, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் இன்று எப்படிப்பட்ட பணியை செய்துள்ளீர்கள் என்றால், அதனை தாங்கள் செய்ததில்லை. இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உமரே! நான் வேண்டுமென்றே அப்படி செய்தேன்.

தேவை ஏற்படும்பட்சத்தில் அவ்வாறு செய்வதற்கான வசதிக்காக அன்னார் (ஸல்) இந்த முன்மாதிரியை வெளிப்படுத்தியுள்ளார்கள் என்று இதிலிருந்து ஆலிம்கள் விளக்கம் கொடுத்துள்ளனர்.

இதற்கிடையில், அன்னார் (ஸல்) பொதுவான பைஅத்தும் வாங்கினார்கள். அதன் விளக்கத்தில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: ஹஸ்ரத் அஸ்வத் பின் ஃகல்ஃப் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிப்பு செய்யப்படுகின்றது: அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: நான் மக்கா வெற்றி நாளன்று ஹஸ்ரத் நபிகள நாயகம் (ஸல்) அவர்களைக் கண்டேன். அன்னார் (ஸல்) மக்களிடமிருந்து பைஅத் வாங்கிக் கொண்டிருந்தார்கள். அன்னார் கர்னி மஸ்ஃபலஹ் என்ற இடத்திற்கு அருகில் அமர்ந்து விட்டார்கள். அந்த இடம் மக்காவின் கீழ்ப் பக்கம் அமைந்துள்ள ஒரு பாறையாகும். மேலும், இஸ்லாத்தின் மீது மக்களிடமிருந்து பைஅத் வாங்கினார்கள். சிறியவர்கள், பெரியவர்கள், ஆண்கள் மற்றும் பெண்கள் அன்னாரின் சமூகத்தில் வந்தார்கள்.

இப்னி ஜரீர் தபரீ அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இஸ்லாத்தின்படி அன்னாரிடம் பைஅத் செய்வதற்காக மக்காவில் மக்கள் ஒன்றுகூடினர். அன்னார் (ஸல்) ஸஃபா குன்றின் மீது அமர்ந்து கொண்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கீழே இருந்தார்கள். நாங்கள் முடிந்தவரை அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் கூற்றை செவியேற்போம் ; மேலும் கட்டுப்படுவோம் என்ற விஷயத்தில் அன்னார் (ஸல்) மக்களிடமிருந்து பைஅத் வாங்கிக் கொண்டிருந்தார்கள்.

ஆண்களிடம் பைஅத் வாங்கி முடித்தப் பிறகு, அன்னார் (ஸல்) பெண்களிடமிருந்து பைஅத் வாங்கினார்கள். அந்த பெண்களில் அபூ ஸுஃப்யானின் மனைவி ஹிந்தாவும் இருந்தார். அவர் முகத்தை மூடியிருந்தார். தான் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களுடன் நடந்து கொண்ட அந்த நடைமுறையைக் குறித்து ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தம்மிடம் கேட்பார்களோ என்ற அச்சம் அவருக்கு இருந்தது. அதன் காரணமாக தான் பிடிக்கப்படுவோமோ என்ற பயம் அவருக்கு இருந்தது. அந்தப் பெண்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜரானபோது, அன்னார் (ஸல்) கூறினார்கள்:

இந்த விஷயத்தின் கீழ் என்னிடம் நீங்கள் பைஅத் செய்யுங்கள்; அதாவது நீங்கள் அல்லாஹ்வுக்கு வேறு எதனையும் இணையாக்க மாட்டீர்கள்; மேலும், நீங்கள் திருட மாட்டீர்கள் என்ற விஷயத்தின் கீழ் என்னிடம் நீங்கள் பைஅத் செய்யுங்கள். அப்போது, அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் அபூ ஸுஃப்யானின் செல்வத்திலிருந்து சில நேரங்களில் சிறிது எடுத்துக் கொள்கிறேன்; இது எனக்கு ஹலாலா? ஹராமா? என்று எனக்கு தெரியாது என்று ஹிந்தா கூறினார்.

அப்போது அபூ ஸுஃப்யான் அங்கு இருந்து அதனைக் கேட்டுக் கொண்டிருந்தார். அவர் கூறினார்: நீ முன்னர் எடுத்த செல்வம் உமக்கு ஹலால் ஆகும். அல்லாஹ் உம்மை மன்னிப்பானாக! இறைத் தூதர் (ஸல்) அவர்கள், ஹிந்தாவை அடையாளம் கண்டு

*நபிமொழியிலிருந்து...*

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL
MERCHANT
Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716
89/11, Shanmugapuram
5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9

கொண்டவாறு, நீர் ஹிந்தா பின்த் உத்பா தானே ? என்று கேட்டார்கள். ஆம்! ஆனால், முன்னர் நிகழ்ந்தவற்றை மன்னித்து விடுங்கள் என்று அவர் கூறினார். இதன் பொருள் என்னவென்றால், இஸ்லாம் மற்றும் தங்களுடைய அருளுக்குரிய இருப்பிற்கு எதிராக நான் என்னவெல்லாம் செய்தேனோ அதனை மன்னித்து விடுங்கள் என்பது இதன் பொருள் ஆகும். அடுத்து, நீர் தீய நடத்தைகளில் ஈடுபடாதீர் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். அதற்கு சுதந்திரமான பெண்ணும் தீய நடத்தைகளில் ஈடுபடுவாரா? என்று அவர் கேட்டார். அடுத்து, அன்னார் (ஸல்), நீர் உமது பிள்ளைகளை கொலை செய்யக் கூடாது ? என்று கேட்டார்கள். அதற்கு, நாங்கள் அவர்களை குழந்தைப் பருவத்தில் பராமரித்துள்ளோம் ; ஆனால், அவர்கள் பெரியவர்கள் ஆனபோது தாங்கள் (ஸல்) பத்ர் போர் சந்தர்ப்பத்தில் கொன்று விட்டீர்கள். நீங்களாச்சு அவர்களாச்சு என்று கூறினார். இதைக் கேட்டு இறைத் தூதர் (ஸல்) அவர்களும், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் சிரித்து விட்டார்கள். அடுத்து, நீர் உமக்கு முன் இருப்பவர் எவர் மீதும் பழிசுமத்தக் கூடாது என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். அதற்கு, பழிசுமத்துவது மிகவும் மோசமான செயலாகும். மேலும், அதனையும் விட சில பாவங்கள் இருக்கின்றன என்று ஹிந்தா கூறினார். பின்னர் அன்னார் (ஸல்) கூறினார்கள்:

நீங்கள் நல்ல விஷயங்களில் எனக்கு கட்டுப்படாமல் இருக்கக் கூடாது. (ஸுபுலுல் ஹுதா, தொகுதி 4, பக்கம் 78-79, ரீயாஸ்,2013)

ஓர் அறிவிப்பில் இவ்வாறு வந்துள்ளது: நான் வழிகேட்டில் இருந்தேன் என்று ஹிந்தா பின்த் உத்பாவிற்கு புரிந்து விட்டது. எனவே நான் முஹம்மது (ஸல்) அவர்களிடம் பைஅத் செய்ய விரும்புகின்றேன் என்று அவர் தமது கணவர் அபூ ஸுஃப்யானிடம் கூறினார். இன்று வரை நீ நிராகரித்து கொண்டு இருந்தாயே? திடீரென இவ்வளவு பெரிய மாற்றம் எப்படி ஏற்பட்டு விட்டது? என்று அபூ ஸுஃப்யான் ஆச்சரியமடைந்தவாறு கேட்டார். அதற்கு அவர் கூறினார்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் மக்கா வெற்றி நாளன்று முஸ்லிம்களை முஹம்மது (ஸல்) அவர்களுடன் இறை வணக்கம் செய்ததைப் பார்த்தேன். மேலும் இரவு முழுவதும் முஹம்மது (ஸல்) அவர்களின் தோழர்கள் கஅபத்துல்லாஹ்வில் எவ்வாறு இறை வணக்கம் செய்து கொண்டிருந்தனர் என்றால், ஒருவர் கியாம் எனும் நிலையில் இருந்தார்; மற்றொருவர் ருகூவின் நிலையில் இருந்தார். மேலும் இன்னொருவர் ஸஜ்தாவின் நிலையில் இருந்தார். இவ்வாறு இறை வணக்கம் செய்தவாறு இன்று வரை நான் எவரையும் கண்டதில்லை.

அபூ ஸுஃப்யான் கூறினார்: உமது சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவருடன் செல்வீராக! அதாவது ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களிடம் செல்ல வேண்டும் என்றால் பின்னர் உமது சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவருடன் செல்!

ஆக, அவர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் சென்றார்; மேலும் அன்னாரை உடன் அழைத்துக் கொண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்)அவர்களின் சமூகத்தில் ஆஜரானார். மேலும், தாம் இஸ்லாத்தை தழுவிய சம்பவத்தை எடுத்துரைத்தார். இஸ்லாத்தை ஒப்புக் கொண்ட பிறகு அவர் வீட்டிற்கு சென்றார். மேலும், அவரது வீட்டில் எந்த சிலை கிடந்திருந்ததோ அதனை உடைத்து துண்டு துண்டாக ஆக்கிவிட்டார். மேலும், உனது காரணத்தால் நாங்கள் ஏமாற்றத்தில் வீழ்ந்து கிடந்தோம் என்று கூறினார். (அஸாபஃ ஃபீஹ் தமீஸுஸ் ஸஹாபா, தொகுதி8, பக்கம் 347, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

ஓர் அறிவிப்பில் உள்ளது. ஹிந்தா இஸ்லாத்தை ஒப்புக் கொண்ட பிறகு இறைத் தூதர் (ஸல்) அவர்களிடம் சென்றார். மேலும், எல்லாப் புகழும் அல்லாஹ்விற்கே உரியன ; அவன் தான் தனது இந்த மார்க்கத்தை வெற்றிப் பெறச் செய்தான்; அந்த மார்க்கத்தை அவன் தனக்கென விரும்பியுள்ளான்; தங்களுடைய கருணையின் சிறிது பகுதி எனக்கும் கிடைக்குமா? அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நான் எப்படிப்பட்ட பெண் என்றால், நான் அல்லாஹ்வின் மீது ஈமான் கொண்டுள்ளேன்; மேலும் அவனை உண்மைப்படுத்தக் கூடியவள் ஆவேன் என்று கூறினார். உம்மை வரவேற்கிறோம் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நான் பூமியில் உங்களின் கூடாரத்தை விட வேறு எவருடைய கூடாரமும் அதிகம் இழிவடையக் கூடாது என்று விரும்பியிருந்தேன். ஆனால், தற்போது முழு பூமியிலும் உள்ள அனைத்து கூடாரங்களின் கண்ணியத்தையும் விடவும் எனக்கு தங்களின் கண்ணியமே மிகவும் நேசத்திற்குரியதாக உள்ளது.


ஹஸ்ரத் ஹிந்தா இஸ்லாத்தை தழுவிய பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் தமது அன்பு மற்றும் பற்றை இவ்வாறு வெளிப்படுத்தினார்கள்; அதாவது, இரண்டு வயதிற்கு குறைவான ஆட்டைப் பொறித்து அன்னாரின் சமூகத்தில் வேலைக்காரியின் மூலம் அனுப்பி வைத்தார். அடிமைப் பெண் இறைத் தூதர் (ஸல்) அவர்களிடம் வந்தார். மேலும், எனது முதலாளி அம்மா இதனை தங்களின் சமூகத்தில் அனுப்பி வைத்துள்ளார்கள் என்று அவர் கூறினார். கறியை பொறித்து அனுப்பி வைத்துள்ளார்கள். மேலும், இன்றைய நாட்களில் எங்களது ஆடுகளின் குட்டிகளின் வயது குறைவாகும் என்று வருத்தம் தெரிவித்தவாறு கூறிக் கொண்டிருந்தார். எனவே நான் இரண்டை அனுப்புகின்றேன். அன்னார் (ஸல்) கூறினார்கள்: அல்லாஹ் உமது ஆடுகள் மற்றும் அதன் குட்டிகளில் பரகத் செய்வானாக. பின்னர் இந்த அடிமைப் பெண் கூறிக் கொண்டிருந்தார்; இறைவன் மீது ஆணையாக, நான் ஆடுகளையும் அதன் குட்டிகளையும் எவ்வளவு அதிகமான எண்ணிக்கையில் பார்த்தேன் என்றால், அதனை அதற்கு முன்னர் நான் கண்டதில்லை. இது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் துஆக்களின் விளைவால் ஆகும் என்று ஹஸ்ரத் ஹிந்த் கூறிவந்தார். (ஸுபுலுல் ஹுதா, தொகுதி5, பக்கம் 255, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் அபூ ஸுஃப்யானின் மனைவியின் பைஅத் சம்பவம் தொடர்பாக இவ்வாறு எடுத்துரைக்கின்றார்கள்: ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் உடலை சிதைத்த அதே பெண்மணிதான் இவர் ஆவார். அவருக்கு அந்த அநீதியான செயலுக்கும், மனிதத்துவத்திற்கு எதிரான செயலுக்கும் தண்டனை கொடுப்பதை அன்னார் (ஸல்) உகந்ததாக கருதினார்கள். அப்போது, பர்தாவிற்கான கட்டளை இறங்கி விட்டிருந்தது. பெண்கள் பைஅத்திற்காக வந்தபோது, ஹிந்தாவும் போர்வையை போர்த்திக் கொண்டு உடன் வந்து விட்டார். மேலும் அவர் பைஅத் செய்துவிட்டார். நாங்கள் ஷிர்க் செய்ய மாட்டோம் என்ற இந்த வாக்கியத்தை அவர் அடைந்திருந்தபோது, அவர் மிகவும் இயல்பில் வேகம் கொண்ட பெண்மணியாக இருந்த காரணத்தினால் அவர் கூறினார்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே, நாங்கள் இனியும் ஷிர்க் செய்வோமா? அன்னார் (ஸல்) தனியாக இருந்தார்கள். மேலும், நாங்கள் முழு வலிமையுடனும், ஆற்றலுடனும் தங்களை எதிர்த்து போரிட்டோம். எங்களது தெய்வம் உண்மையானதாக இருந்திருந்தால் நீங்கள் எப்படி வெற்றி பெற்று இருப்பீர்கள்? அந்த தெய்வமோ முற்றிலும் வீணானதாக நிரூபணமாகி விட்டது; மேலும் நாங்கள் தோற்று விட்டோம். இது ஹிந்தாதானே? என்று இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அன்னாருக்கு அவரது குரல் அடையாளம் தெரிந்திருந்தது. இறுதியில் இரத்த உறவும் இருந்தது. ஹிந்தா கூறினார்:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நான் தற்போது முஸ்லிமாகி விட்டேன். தற்போது தங்களுக்கு என்னை கொலை செய்வதற்கு அதிகாரமில்லை. அப்போது, இறைத் தூதர் (ஸல்) அவர்கள் சிரித்து விட்டார்கள். அதற்கு, ஆம்! இனி உம்மை பிடிக்க முடியாது என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

சுருக்கமாக, அன்னார் (ஸல்) அனைத்து தெய்வங்களையும் உடைத்து ஓர் இறைவனை உருவாக்கி விட்டார்கள் என்று அந்த சமுதாயம் கருதியிருந்தது. அவர்களிடத்தில் எந்த அளவிற்கு மாற்றம் உருவாகி விட்டது என்றால், இறைவன் ஏகன் இல்லை என்று எவராவது கூறமுடியுமா? என்று ஹிந்தா போன்ற பெண்மணி கூறினார். ( அப்னே ஃபராயிஸ் கி அதாயிகி மே ராத் தின் முன்ஹிமக் எனும் நூல், அன்வாருல் உலூம், தொகுதி 20, பக்கம் 14 - 15)

பைஅத்தின் அதே நாட்களில் நிகழ்ந்த சம்பவத்தைப் பற்றிய குறிப்பு கிடைக்கின்றது. ஒரு நபர் பைஅத் செய்வதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜரானார். மேலும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஆளுமை மற்றும் கம்பீரத்தால் அவர் அச்சத்திற்குள்ளாகி நடுங்கிக்





கொண்டிருந்தார். அவருக்கு ஆறுதல் நல்கியவாறு, பயப்பட வேண்டாம்! என்று அன்னார் (ஸல்) பணிவு மற்றும் தாழ்மை குணத்தை வெளிப்படுத்தியவாறு இவ்வாறு கூறினார்கள்:

நான் ஒன்றும் அரசன் அல்ல ; நான் மக்காவில் காய்ந்த இறைச்சியை உண்டு வந்த அந்தப் பெண்மணியின் மகன் ஆவேன். (ஸுனன் இப்னு மாஜா, ஹதீஸ், 3312)

எந்தக் குற்றவாளிகள் கொல்லப்படுவதற்கான கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டிருந்தனவோ அவற்றைக் குறித்து இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. அதன் விளக்கத்தை எடுத்துரைத்து விட்டேன்; அது தொடர்பாக சில மக்களுக்கு ஐயங்களும் இருக்கின்றன. சம்பவங்களும் இதனையே கூறுகின்றன ; ஏனெனில், எந்தக் காரணங்களின் அடிப்படையில் கொலை செய்யப்படுவதற்கான கட்டளை வழங்கப்பட்டது என்று எடுத்துரைக்கப்பட்டிருந்ததோ அவை முற்றிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அமல் மற்றும் இயல்பிற்கு எதிரானதாகும்.

எவ்வாறிருப்பினும், அவர்கள் யார் யாராக இருந்தார்கள்? என்பதை நான் முன்னர் எடுத்துரைத்து விட்டேன். வரலாற்றில் சில இடங்களில் கூறப்பட்டுள்ளது; மேலும், பிறகு அது மறுக்கப்பட்டுள்ளது தொடர்பாகவும் எடுத்துரைப்பேன்.

இப்னு இஸ்ஹாக் இதனை குறிப்பிட்டுள்ளார். அதாவது சில நபர்களின் குற்றங்களின் காரணமாக அவர்கள் தொடர்பாக அன்னார் (ஸல்) இவ்வாறு கூறினார்கள்; அதாவது அவர்கள் எங்கு தென்பட்டாலும் அவர்கள் கொலை செய்யப்பட வேண்டும் என்று கூறியிருந்தார்கள். அந்த நபர்கள் எட்டு ஆண்களாகவும், ஆறு பெண்களாகவும் இருந்தனர். இது ஃபத்ஹுல் பாரியில் எழுதப்பட்டுள்ளது. ஸீரத் ஹல்பியாவில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: அதாவது இவர்கள் மொத்தம் பதினோறு நபர்களாக இருந்தனர். வாக்தீ எழுதியுள்ளார்: இவர்கள் மொத்தம் பத்து நபர்களாக இருந்தனர். அவர்களில் ஆறு நபர்கள் ஆண்கள் மேலும் நான்கு நபர்கள் பெண்களாக இருந்தனர். (ஃபத்ஹுல் பாரீ, தொகுதி 8, பக்கம் 14, கிதாபுல் மகாஸீ ஹதீஸ் எண்: 4280 ஆராம் பாஃக் கராச்சி)

புஹாரீ ஷரஹ் ஃபத்ஹுல் பாரீயில் அந்த 14 நபர்களின் பெயர்களும் எழுதப்பட்டுள்ளன. அவர்களில், அப்துல் உஸ்ஸா, ஃகதல், அப்துல்லாஹ் பின் ஸஅத் பின் அபீ ஸரஹ், இக்ரிமா பின் அபீ ஜஹல், மிக்யஸ் பின் ஸுபாபஃ , ஹப்பார் பின் அஸ்வத் போன்றோர் அடங்குவர். (ஃபத்ஹுல் பாரீ, தொகுதி 8, பக்கம் 13, கதீமீ குதுப் கானா, ஆராம் பாஃக் கராச்சி)

ஒரு ஹதீஸில் உள்ளது; இறைத் தூதர் (ஸல்) அவர்கள் மக்கா வெற்றி நாளன்று நான்கு ஆண்கள், மற்றும் 2 பெண்களை தவிர மற்ற அனைவருக்கும் பாதுகாப்பு வழங்கிவிட்டிருந்தார்கள். அவர்களை கொன்று விடுங்கள் ; அவர்கள் கஅபத்துல்லாஹ்வின் திரைச்சீலைகளில் தொங்கிக் கொண்டிருந்தாலும் சரி (ஸுனன் நிஸாயீ, கிதாபுல் மஹாரிபஃ, ஹதீஸ், 4072)

ஒரு ஹதீஸில் உள்ளது; இறைத் தூதர் (ஸல்) அவர்கள் மக்கா வெற்றி நாளன்று நான்கு ஆண்களைத் தவிர மற்ற அனைவருக்கும் பாதுகாப்பு வழங்கிவிட்டிருந்தார்கள். அவர்களில் அப்துல் உஸ்ஸா, ஃகதல், முகைஸ் பின் ஸுபாபஃ;, அப்துல்லாஹ் பின் ஸஅத் பின் அபீ ஸரஹ், உம்மே ஸாரஃ ஆகியோர் இருந்தனர். (அல்பதாயஃ வன்நஹாயா, தொகுதி 6, பக்கம் 562, மக்தபஃ தாரே ஹிஜ்ர், பெய்ரூத்)

ஒரு கட்டுரையாளர் இவ்வாறு எழுதியுள்ளார்: அதாவது எந்த நபர்களை கொலை செய்வது அனுமதிக்கப்பட்டிருந்ததோ அதாவது ஆகுமானதாக ஆக்கப்பட்டிருந்ததோ அவர்களில் பெரும்பாலாரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மன்னித்து விட்டிருந்தார்கள். மேலும், சிலர் மட்டுமே கொலை செய்யப்பட்டிருந்தார்கள். அவர்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மன்னிப்பிற்கு முன்னரே கொலை செய்து விட்டிருந்தார்கள். (ஃபத்ஹ் மக்கா, பக்கம் 261 - 262, நஃபீஸ் அகாடமி, காராச்சி)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இது தொடர்பாக தமது கருத்தாக எழுதியுள்ள விஷயம் இவ்வாறாகும்:

பதினோறு ஆண்களும், நான்கு பெண்களும் எப்படிப்பட்டவர்களாக இருந்தார்கள் என்றால், அவர்கள் தொடர்பாக கடுமையான அநீதியான கொலைகளும், குழப்பங்களும் நிரூபணமாகியிருந்தன. அவர்கள் போர்க் குற்றவாளிகளாக இருந்தனர். அவர்கள் தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கட்டளை பிறப்பித்து இருந்தார்கள். அதாவது அவர்களை கொலை செய்து விடுங்கள் என்று கட்டளை வழங்கியிருந்தார்கள். ஏனெனில், அவர்கள் வெறும் நிராகரிப்பு அல்லது சண்டையிட்ட சாதாரண குற்றவாளிகளாக இருக்கவில்லை. மாறாக போர்க் குற்றவாளிகளாக இருந்தனர். ஆனால், அவர்களிலும் பெரும்பாலாரை முஸ்லிம்களின் பரிந்துரையின் அடிப்படையில் அன்னார் (ஸல்) விட்டு விட்டார்கள். (தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், பக்கம் 344, அன்வாருல் உலூம், தொகுதி 20)

ஆக, பெரும்பாலார் விடுவிக்கப்பட்டு விட்டார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் காத்தமுல் அன்பியா (ஸல்) அவர்கள் மக்காவாசிகளின் மீதும் மற்ற நபர்களின் மீதும் முற்றிலும் வெற்றி பெற்று மேலும் அவர்களை தமது வாளுக்கு கீழே இருப்பதைக் கண்டு பின்னர் அவர்களை மன்னித்து விட்டார்கள். மேலும், சில நபர்களுக்கு மட்டுமே தண்டனை வழங்கினார்கள். எவர்களுக்கு தண்டனை கொடுப்பதற்கு வல்ல ஏக இறைவனின் புறமிருந்து உறுதியான கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்ததோ அவர்கள் மட்டுமே தண்டிக்கப்பட்டார்கள். அவர்களை குறித்து அல்லாஹ் மிகத் தெளிவாக கூறியிருந்தான். மேலும், அந்த நிரந்தரமான சாபத்திற்குரியவர்களைத் தவிர ஒவ்வொரு எதிரியையும் மன்னித்து விட்டார்கள். (பராஹீனே அஹ்மதிய்யா, ரூஹானீ கஸாயீன், தொகுதி 1, பக்கம் 286 -287, ஹாஷியா நம்பர் 11)

எந்த நபர்கள் கொலை செய்யப்பட்டிருந்தார்களோ வரலாற்றில் அதற்கான காரணங்களும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. அவற்றை நான் எடுத்துரைத்து விடுகின்றேன். ஆயினும் அவை திருப்தி அளிக்கக் கூடிய காரணங்கள் அல்ல. எழுதப்பட்டுள்ள முதலாவது பெயர் என்பது அப்துல் உஸ்ஸா பின் கதல் என்பவனுடையதாகும். அவன் முதலில் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டிருந்தான். இறைத் தூதர் (ஸல்) அவர்கள் அவனுக்கு அப்துல்லாஹ் என்று பெயர் சூட்டியிருந்தார்கள். மேலும், அவன் மதீனாவை நோக்கி ஹிஜ்ரத் செய்திருந்தான். அன்னார் (ஸல்) அவனை ஸகாத் வசூல் செய்வதற்காக அனுப்பி வைத்தார்கள். அவனுடன் பனூ குஸாஆ கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு நபரும் இருந்தார். அந்த நபர் அவனுக்காக உணவு சமைத்து வந்தார். மேலும், அவருக்கு தொண்டாற்றி வந்தார். அந்த இருவரும் ஓரிடத்தில் முகாமிட்டார்கள்; மேலும் அங்கு மக்கள் ஒன்று கூடி ஸக்காத் கொடுத்துதான் வந்தார்கள். இப்னு கதல் குஸாஇ கோத்திரத்தைச் சேர்ந்த அந்த நபரிடம், நீ உணவு சமைப்பாயக! என்று கட்டளை வழங்கி விட்டு அவன் சுயமே மதியம் வரை தூங்கி விட்டார். கண் விழித்தபோதோ குஸாஇ கோத்திரத்தைச் சேர்ந்த அந்த நபர் தூங்கிக் கொண்டிருந்தார். அவர் எதனையும் தயார் செய்திருக்கவில்லை. இப்னு கதல் வாளை எடுத்து அவனை கொன்று விட்டிருந்தான்.

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இறைத் தூதர் (ஸல்) அவர்கள் மக்கா வெற்றி நாளன்று மக்காவில் நுழைந்தார்கள். அன்னாரின் தலையில் போர்க் கவசம் இருந்தது. அன்னார் (ஸல்) அதனை கழற்றி வைத்தார்கள். ஒரு நபர் அன்னாரின் சமூகத்தில் ஆஜரானார். இப்னு கதல் கஅபத்துல்லாஹ்வின் திரைச் சீலைகளில் தொங்கிக் கொண்டுள்ளார்; என்று அவர் கூறினார்: அவரை கொன்று விடுங்கள் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

இரண்டாவது நபர், மிகைஸ் பின் ஸுபாபஃ ஆவான். அவன் ஓர் அன்ஸாரி ஸஹாபியை ஷஹீது ஆக்குவதற்காக இஸ்லாத்தை தழுவியிருந்தான். அந்த அன்ஸாரி ஸஹாபி ஒரு போரில் மிகைஸின் சகோதரனை எதிரியாக கருதி தவறுதலாக கொலை செய்திருந்தார்கள். மிகைஸ் தனது சகோதரனுக்குரிய இழப்பீட்டையும் பெற்றுக்




Manufacturer and Retailer of Leather Fashion and Bags.
Specialized in the Desing and Production of Quality & Sale Online Platform
Like Flipkart, Amazon, Meesho. & Product Key Word is "Grizzly Wallet"
6294738647 mygrizzlyindia@gmail.com, www.mygrizzlyindia.com
my grizzly india
my grizzly india
my grizzly india

Proprietor off : 044- 2260 1886
RAZIK XEROX & TELECOM
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX

➢ PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
➢ LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
➢ SCANNING, RECHARGE, COLOUR XEROX,
➢ ALL VEHICLE INSURANCE, COURIER
NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 10 Thursday 21 AUG 2025 Issue No.34

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

கொண்டான். மேலும், அந்த அன்ஸாரி ஸஹாபியையும் ஷஹீது ஆக்கிவிட்டான். பின்னர் இஸ்லாத்தை விட்டு விலகி மக்காவிற்கு திரும்பி சென்று விட்டான். ஹஸ்ரத் நுமைலஃ பின் அப்தில்லாஹ் மக்கா வெற்றி நாளன்று அவனை கொன்று விட்டார்கள்.

அடுத்தது, ஹுவைரஸ் பின் நுகைஸ் ஆவான். இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: அதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவனை கொல்வதற்கு ஆணை பிறப்பித்தார்கள். ஏனெனில், அவன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு துன்பம் கொடுத்து வந்தான். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அவனை கொலை செய்தார்கள். ஒரு வரலாற்றாசிரியர் இவ்வாறு எழுதுகின்றார்: ஹுவைரஸ் பின் நுகைஸ் கொலை செய்யப்பட்டதற்கு இந்த விஷயமே காரணமாக கிடைக்கின்றது. அவன் இறைத் தூதர் (ஸல்) அவர்களுக்கு துன்பம் கொடுத்து வந்தான். ஆனால், அவனை கொலை செய்ததற்கு இதைத் தவிர வேறு ஏதாவது காரணம் இருக்கும். ஏனெனில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமக்காக பழிவாங்கியது கிடையாது.

அடுத்து, ஹுவைரஸ் பின் தலாதில் குஸாஆ என்பவன் ஆவான். இவன் இறைத் தூதர் (ஸல்) அவர்களுக்கு எதிராக தீயக் கவிதைகளை கூறிவந்தான். இவனையும் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களே கொலை செய்தார்கள்.

அடுத்து, இப்னு கதல் என்பவனின் அடிமைப் பெண் கரீனாஃ என்பவளாக இருந்தாள். அவள் அர்னப் என்று அழைக்கப்படுகிறாள். இவள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை குறித்து மோசமான கவிதைகளை கூறிவந்தாள். இவளையும் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள்தான் கொலை செய்தார்கள். (ஸுபுலுல் ஹுதா வர் ரஷாத், தொகுதி 5, பக்கம் 223 -225, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

எவர்கள் கொலை செய்யப்பட்டார்களோ அவர்களின் எண்ணிக்கை பதினைந்து வரை கிடைக்கின்றது என்றபோதிலும்,ஆய்வில் தெரிய வருவது என்னவென்றால், இந்த எண்ணிக்கை சரியானது இல்லை. ஏனெனில், எந்தக் குற்றங்களின் காரணமாக அவர்கள் கொலை செய்யப்பட்டார்கள் என்ற குறிப்பு கிடைக்கின்றதோ அந்தக் குற்றங்கள் சுயமே வரலாற்றாசிரியர்களுக்கு தவறு ஏற்பட்டுள்ளது என்று கூறுகின்றன. அந்த நபர்கள் முர்தத் ஆகிவிட்டார்கள்; அல்லது அவர்கள் இறைத் தூதர் (ஸல்) அவர்களுக்கு துன்பமும், வேதனையும் கொடுத்து வந்தார்கள் அல்லது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு எதிராக மோசமான கவிதைகளைக் கூறிவந்தனர் என்பதே பெரும்பாலும் அவர்கள் செய்த குற்றங்களாக கூறப்பட்டுள்ளன. இவை பிற்காலத்தில் தோன்றிய சிந்தனை என்று இந்த குற்றச்சாட்டுகளே கூறுகின்றன. ஏனெனில், திருக்குர்ஆன் மற்றும் இறைத் தூதர் (ஸல்) அவர்களின் சுன்னத் போன்றவற்றுக்கு எதிராக இந்த சிந்தனை தோன்றியுள்ளது. அதாவது முர்தத் ஆனவருக்கு தண்டனை மரணம் ஆகும் அல்லது நபித்துவ நிந்தனைக்கான தண்டனை மரணம் ஆகும். ஆக இவை அனைத்தும் பிற்காலத்து சிந்தனைகள் ஆகும். முன்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் இவை நடந்ததே கிடையாது. மார்க்கத்திலிருந்து வெளியேறியவருக்கு தண்டனை மரணம் கிடையாது என்று திருக்குர்ஆனிலிருந்து நிரூபணமாகின்றது. திருக்குர்ஆனிலிருந்தும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியிலிருந்தும் இந்த விஷயம் நிரூபணம் ஆகும்போது, அதாவது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு துன்பம் கொடுப்பது, அன்னாருக்கு தொல்லை கொடுப்பது மற்றும் அன்னாருக்கு எதிராக மோசமான கவிதைகளை கூறுவது போன்ற குற்றங்களுக்கு மரண தண்டனை வழங்கப்படுவதில்லை என்று நிரூபணமாகும்போது பின்னர் மக்கா வெற்றியின் சந்தர்ப்பத்தின்போது எந்தெந்த நபர்களுக்கு எதிராக கொலை செய்யப்படுவதற்கு கட்டளை பிறப்பிக்கப்பட்டதோ நிச்சயமாக அவர்களின் குற்றங்கள் வேறு ஏதாவது குற்றமாகவே இருக்க வேண்டும் என்பது தெளிவாக தெரிகின்றது. ஆனால், போர்க் குற்றவாளிகளாக இருந்தனர். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களும் அவ்வாறே எழுதியுள்ளார்கள்:

அவர்கள் போர்க் குற்றவாளிகளாக இருந்தனர் அல்லது அவர்கள் கொலையாளிகளாக இருந்தனர் மேலும், அவர்கள் இத்தகைய குற்றவாளிகளாகவே இருந்தனர். ஆனால், அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு எதிராக தீயக் கவிதைகளை கூறிவிட்டனர் அல்லது நபித்துவ நிந்தனை செய்தவர்களாக இருந்தனர்; எனவே அவர்கள் கொலை செய்யப்படுவதற்கு கட்டளை பிறப்பிக்கப்பட்டது என்பதெல்லாம் தவறாகும்.

மக்கா வெற்றி சந்தர்ப்பத்தின்போது, அந்த அறிவிப்புகளின் மீது விமர்சனங்களை முன்வைத்தவாறு ஆசியக் கண்டத்தின் ஒரு பிரபலமான வாழ்க்கை வரலாற்றாசிரியர் அல்லாமா ஷிப்லீ நுஃமானீ இவ்வாறு எழுதுகின்றார்கள்:

அர்பாபே ஸீர் இவ்வாறு கூறுகின்றார்கள்: அதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவாசிகளுக்கு பாதுகாப்பு வழங்கியிருந்தார்கள் என்றபோதிலும், பத்து நபர்கள் தொடர்பாக அவர்களை எங்கு கண்டாலும் அங்கு கொலை செய்து விடுங்கள் என்று கட்டளை வழங்கினார்கள். அவர்களில் சிலர், உதாரணமாக அப்துல்லாஹ் பின் கதல், மிகைஸ் பின் ஸுபாபஃ ஆகியோர் கொலைக் குற்றவாளிகளாக இருந்தனர். மேலும், பழிக்குப் பழி என்ற அடிப்படையில் கொல்லப்பட்டிருந்தனர். இவர்களையும் சேர்த்துக் கொண்டால் பின்னர் அவர்கள் இருவரும் கொலை குற்றவாளிகளாக இருந்தனர். எனவே கொலை செய்யப்பட்டனர்.ஆனால், மற்ற பலர் இருக்கின்றனர்; அவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருந்தனர் என்றால், அவர்கள் மக்காவில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை துன்புறுத்தி வந்தார்கள் ; அல்லது அன்னாருக்கு எதிராக மோசமான கவிதைகளை கூறிவந்தனர்; அன்னாருக்கு துன்பம் கொடுத்து வந்தார்கள் அல்லது தீய கவிதைகளை கூறிவந்தனர். இதுவே அவர்களின் குற்றமாக இருந்தது. அவர்களில் ஒரு பெண்மணி - அவள் அன்னாருக்கு எதிராக தீயக் கவிதைகளை பாடி வந்தார் என்ற குற்றத்திற்காக கொலை செய்யப்பட்டாள்; இவ்வாறு கூறப்படுகின்றது. ஆனால், அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

ஆழ்ந்த விமர்சனங்களின் அடிப்படையில், இந்த கூற்று சரியானது கிடையாது. இந்தக் குற்றத்தை இழைத்த குற்றவாளிகளாக முழு மக்காவும் இருந்தது. ஏளனம் செய்து வந்தனர் ; மேலும் தீய கவிதைகளைக் கூறிவந்தனர் என்ற இந்த விஷயத்தையே எடுத்துக் கொண்டால், முழு மக்காவே இதைத் தான் செய்து வந்தது. அப்படியென்றால் எல்லாரையும் கொலை செய்திருக்க வேண்டும். குறைஷியர்களில் ஓரிருவரைத் தவிர வேறு எவர் தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கடும் துன்பங்களை இழைக்கவில்லை. அவ்வாறிருந்தபோதிலும் அந்த மக்களுக்கோ .


என்று அறிவிப்பு செய்யப்பட்டது. அதாவது, நீங்கள் சுதந்திரமானவர்கள் ஆவீர்கள். எந்த மக்கள் கொலை செய்யப்பட்டதாக கூறப்படுகின்றதோ அவர்கள் இவர்களுடன் ஒப்பிடும் போது குறைந்த அந்தஸ்துடைய குற்றவாளிகளாக இருந்தனர்.

ஹஸ்ரத் ஆயிஷா ஸித்தீகா (ரலி) அவர்களின் இந்த அறிவிப்பு ஸிஹாஹ் ஸித்தாவில் இடம் பெற்றுள்ளது. அதாவது ஹஸ்ரத் நபிகள்

இதன் தொடர்ச்சி. 7-ம் பக்கம் ......

**National Watch Company**
**Sales & Service**

**B. Mohamed Adil**
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM
99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT
99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad